
ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஞ கார்த்திகைமீ 10—12—53 [இதழ் 1

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்



தண்டபாணி கோயில்

ருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு
ான் நடைபெற்றது.

தருமபுர ஆதீனம்.

தருமபுர ஆதின வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவா

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக் கின்றன.

டிம்மி 1x8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு: ... ரூ. 3—8—0

ரிஜிஸ்டர் தபாற்செலவுவகையரு ரூ. 1—5—0

காலிகோ பைண்டு: ... ரூ. 5—0—0

ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

தரும

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஞ ஸ கார்த்திகைமீ 10—12—53. [இதழ் 1

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பதின்மூன்றும் ஆண்டு

ஆண்டு ஏற ஏற அநுபவம் உயர்கிறது. அநுபவம் அனைவரையும் ஒருமனப்படுத்தும் சாதனம். கண்ட கற்ற கேட்ட நிகழ்ச்சிகளைப் பிறர்மனத்து இருத்தும் இயைபு இவ் அநுபவத்துக்கு உண்டு என்பதை உலகம் அறியும்.

பல புத்தகங்களைப் படித்தறிந்த உழவின் நுணுக்கங் களைப் புத்தகம் புரட்டாத அநுபவசாலி உழைப்பால் உணர் கிறான். இங்ஙனமே ஏனையதொழில் மக்களும். இதனால் ஏட்டறிவைக்காட்டிலும் அநுபவ அறிவு உயர்ந்தது என்பது தெளிவு.

சைவத்தமிழுலகில் பிறந்து மொழிபயின்றபின்னெல்லாம் நாதன் திறப்பேசிய நம் அம்மையாரைப்போல ஞானசம்பந்தமும் இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளாக, துவாதசாந்தத்தலத்தில் கால்மாறியாடிய கருணைக்கடலின் திருவருள் மிகுதியாலும் துவாதசாந்தப்பெருவெளியில் துரியங்கடந்த பரநாத மூலத்தலத்து முளைத்த முழுமுதலாகிய செந்தமிழரசியின் திருவருளாலும் நன்கு வளர்ந்து பதின்மூன்றும் ஆண்டை எட்டியிருக்கிறது.

இந்த ஆண்டிலும் வழக்கம்போல **ஞானசம்பந்தம்** சிறந்த சித்தாந்த ஞானநூல்களும், கட்டுரைகளும், சமய வளர்ச்சிக்குரிய ஆதீனப் பணிகளின் செயல் முறைகளும், மதிப்புரைகளும் தாங்கி வெளிவரும்.

இப்பொழுது கந்தபுராணக் கவிச்சித்திரங்களும் தொடங்கி வெளிவருகிறது. அடுத்த இதழிலிருந்து பௌஷ்கர விருத்தி மொழிபெயர்ப்பும் வெளிவரும்.

இளைஞர்க்கு ஏற்றமுறையில் அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரலாறுகள் மிகச்சுருக்கமாக வெளிவரும். சிறுகதைகளும் தொடர்கதைகளும் இடம்பெறும்.

அன்பர்கள் தங்கள் நண்பரையும், இதழோடு தொடர்புறுத்தி ஆதரிப்பார்களாக! ஞானச்செல்வர்கள் சிறந்த கட்டுரைகளைத் தந்து ஞானசம்பந்தத்தை வளர்ப்பார்களாக!!

கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

விகடசக்கரக்கணபதியை வேண்டிக்கொள்வோமா?

எடுத்தகாரியம் இனிமையாக முடியவேண்டுமானால் விநாயகரை வேண்டிக்கொள்ளத்தான் வேண்டும். காஞ்சிபுரத்திலே குமரகோயில் குருக்களாயிருந்த கச்சியப்ப சிவாசாரியார் முருகன் விளையாடலைக் காவியமாகச்செய்யத் தொடங்குகிறார். எடுத்த எடுப்பிலேயே விநாயக வணக்கமாக ஒரு கவிச் சித்திரத்தைப் படிப்பவர் மனத்திலேயெல்லாம் எழுதத் தொடங்குகிறார் பாருங்கள்!

விநாயகர்க்கு யானைமுகம்; தலையிலே கிரீடம்; நெற்றியிலே அலங்காரத்துணி தொங்கிக்கொண்டிருக்கிறது. ஒடிந்ததுபோக, இருக்கிற ஒரு கொம்பிலே கல்லிழைத்த பூண் கட்டியிருக்கின்றது. இரண்டு காதுகளிலும் வெண்சாமரம் தொங்கி ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் விநாயகப்பெருமான் விகடக் கூத்தாடுகிறார்.

உச்சியின் மகுட மின்ன ஒளிர்தர நுதலின் ஓடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள்கிம் புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண்(டு) உற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

(ஓடை - முகபடாம்; மருப்பு - கொம்பு; கிம்புரி - கொம்பில் அணியும் பூண்.)

இப்படிப்பட்ட கணபதிக்கு அன்புசெய்தால், நமது கந்தபுராணக் கவிச்சித்திரமும் கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணம் முடிவுற்றதுபோல இனிது முடியுமல்லவா?

கைலாசப்படலம்

ஒளி வீசுகிறது :

ஒளியால், கைலாசத்துக்கு வந்தவர் போகிறவர்கள் உடம் பெல்லாம் ஒரே வெண்மை. உடையவர்தன்மை உடைமைப் பொருளுக்கும் உண்டல்லவா! உடையவன் யார்? கைலாச நாதன்; கருணைமூர்த்தி. இவரிடம் யாராவது அன்போடு அணுகிவிட்டாற்போதும். அவர்களிடம் இயல்பாகவே உள்ள அறியாமையைப் போக்கிவிடுகிறார்; ஒரே ஞான ஒளியைத் தந்துவிடுகிறார் அதுபோலத்தான் இந்த மலையும் கவிதை யைக் காணுங்கள் :

பாச நீக்கித்தன் பாற்படு நல்லருள்
ஈசன் நல்கும் இயல்பென எய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே.

(தேசு - ஒளி, மெய்யொளி - உண்மை ஒளி; உடலொளியு மாம்)

இறைவன்போல் என்றும் அழியாமலை :

உலகமெல்லாம் அழிந்தாலும் – மேரு முதலிய மலைகள் குலைந்தாலும், அழியாமல் இருப்பது கயிலாயம். அழிவே இல்லாத கடவுள் இருக்கும் இடமும் அழியாதுதானே!

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினும் உலகெலாம் அழியினும் பரந்து
கூடும் அண்டங்கள் குலையினும் கொன்றைவே ணியன்போல்
கேடி லாமலே அமர்வது கயிலையங் கிரியே.

(மாடு - பக்கம்; வரை - மலை; பாடு - அழிவு.)

அழகான கோயில் :

இந்த மலையைச் சுற்றித்தான், சூரியனென்ன, சந்திரன் என்ன, இராகு கேது நீங்கலாகச் செவ்வாய், புதன் முதலிய கிரகங்கள் என்ன, மற்ற தேவர்கள் என்ன எல்லாரும் அம் மலையை வலம் வருகிறார்களாம். இந்த மலையைத் தனக்குத் தலைவனாகக்கொண்டே எல்லா மலைகளும் விளங்குகின்றன. அந்தமலையின் நடுவிலேதான் நாம் இப்போது காணப்போகும் சிற்பத் தொழில் நிறைந்த சிவாலயம். அது கற்கோயிலல்ல; பொற்கோயில். வயிரமும், வைடூரியமும், மாணிக்கமும், பச்சையுமாகப் பக்கத்திலுள்ள பரிவாரக்கோயில்களெல்லாம் இழைத்திழைத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றின் இடையிலே இந்தக் கோயில் இருக்கிறது.

அன்னதோர் கயிலை நாப்பண்
அம்பொனின் சுடர்மேல் கொண்ட
நன்னெடும் சிமயத்(து) ஓங்கல்
நவைஒரீஇ நண்ணிற்(று) என்னக்
கன்னியம் காப்பு மேவிக்
கதிர்மணிக் கற்றை சுற்றப்
பொன்னெடும் கோயில் ஒன்று
பொலிவொடும் பொருந்திற் றன்றே.

(நாப்பண் - நடு; சிமயம் - உச்சி; ஓங்கல் - மலை; நவை ஒரீஇ - குற்றம் நீங்கி; கன்னியங்காப்பு - அழியாக்காவல்.)

சிம்மாசனத்தில் சிவபெருமான்:

அந்தக் கோயிலின் நடுவிலே ஒரு அழகான மண்டபம்; அதுவும் மாணிக்கமண்டபம். அதிலே ஒரு சிம்மாசனம். அதிலே வேதநாயகனாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்றார். பக்கத்திலே பார்வதி.

சோதி சேரும்அத் தூமணீ மண்டபத்(து)
ஆதி யான அரியணை உம்பரின்
காத லாகும் கவுரீஓர் பாங்குற
வேத நாயகன் வீற்றிருந் தானரோ.

(அரியணை - சிம்மாசனம்; உம்பரின் - மேலே.)

பக்கங்களில் :

ஒருபக்கத்திலே தும்புருவும் நாரதரும் யாழை மீட்டிக் கொண்டு பரமன் புகழைப் பாடுகிறார்கள். இருமருங்கும் ஏவலாளர் வந்து கவரிகள் வீசுகிறார்கள். இந்தக் காட்சி அதி அற்புதமானது. சத்யலோகத்திலிருக்கிற கங்கையும், வைகுண்டத்திலிருக்கின்ற கங்காநதியும் பெருமான் முடியில் இருக்கிற கங்கைக்கு விழுந்து எழுந்து வணங்குகின்றவாம்.

அதிகன் வேணியில் ஆர்தரு கங்கையை
விதி புரந்தரன் விண்டுல கத்துள
நதிகள் தாழ்ந்தென நன்னயத்(து) ஏவல்செய்
கதியி னோர்கள் கவரிகள் வீசினர்.

(அதிகன் - சிவபெருமான், மேலானேன்; வேணி - சடை விதி - பிரமன்; புரந்தரன் - இந்திரன்; விண்டு - விஷ்ணு.)

மேலும் :

சில பக்தர்கள் ஆலவட்டம் அசைத்தார்கள். இந்தச் சமயத்திலே ஏகக்கூட்டம். பதினேருகோடி உருத்திரர்கள் சிவபெருமானைப் போலவே திருமேனி படைத்தவர்கள். பூதகணங்கள் எல்லாரும் சிவபெருமானுடைய திருவருளை விரும்பிச் சந்நிதியிலே கூடியிருக்கிறார்கள்.

சிவபெருமானுடைய திருவோலக்கம் இப்படி மிக அழகாக நடந்துகொண்டிருக்கிறது.

(தொடரும்)

ஆன்மா

புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.
(தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்)

ஆன்மா உண்டா? இல்லையா? என்ற ஐயத்தை முதலில் தீர்த்துக்கொள்ளல் வேண்டும். இந்த ஐயம் தோன்றுவதே குற்றம். உண்டா? இல்லையா? என்று ஐயம் அடைவதே ஆன்மா. ஆன்மா இல்லை என்று சொல்லுவது யாது? உடம்பு சொல்லுமோ? உடம்புக்குள் அப்படிச் சொல்லுவது ஒன்று இருந்தாகவேண்டும். அதுவே ஆன்மா. 'இலது என்றலின் ஆன்மா உளது'

என் உடம்பு என்று, தனக்கு இடமாயிருக்கும் உடம்பைச் சொல்லிக்கொள்வது ஆன்மாவே அன்றி வேறில்லை. எனதுடல் என்பதில் எனது + உடல் என்ற இரண்டு சொற்கள் இருக்கின்றன. 'உடல் (உடம்பு) பேசவல்லது அன்று; எனது என்று சொல்லிக் கொள்ளத்தக்கது பேசவும், எண்ணவும், அறியவும் வல்லதாகிய ஆன்மாவே. 'எனதுடல் என்றலில் ஆன்மா உளது'

உடம்பு ஆன்மா அல்ல. மெய் வாய் கண் மூக்குச் செவி களாகிய ஐம்பொறிகளும் வேறு. ஆன்மா வேறு. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய விஷயங்கள் ஆன்மா அல்ல. அவற்றின் வேறுயிருந்து, ஆன்மா அவற்றை அடைகின்றன. தான் அல்லாத எல்லாப் பொருளையும் 'இது ஆன்மா அன்று' 'இது ஆன்மா அன்று' என்று தனித்தனியே விலக்கி நிற்பது எது? அதுவே ஆன்மா அதுவே, 'எனதுடல் இவ்வுடல்' என்று தனக்கு இடமாகிய உடம்பைச் சுட்டுகின்றது. சுட்டு தற்கு எது அறிவுடையதோ அதுவே ஆன்மாவாகும். அறி வில்லாத உடம்பும் பொறிகளும் புலன்களும் மற்றையவையும் அறிவு (ஆன்மாவு)க்கு வேறே யான் உடம்பு, யான் கை, யான் கால் என்று வழங்குவது இல்லை. அதனாலும் உடம்பு முதலியவற்றிற்கு வேறுக யான் என்றும் எனதென்றும் சொருக்கு அடையும் ஆன்மா ஒன்று இருப்பது தெரியும்.

என் வீடு, என் ஊர் என்றுற்போல என்கை என்கால் என்று சொல்லும்போது, வீட்டையும் ஊரையும் கையையும் காலையும் ஆன்மா என்று எண்ணுவது பொருந்துமோ? பொருந்துமானால், மனைவி முதலிய புறப்பொருள்களே ஆன்மா என்று மயங்குவதும் மயக்கமாகாமல் தெளிவாகிப் போம்.

ஆன்மாவே மெய் (துவக்கு) ஆகிய பொறிவழியாக ஊற்றை (ஸ்பரிசத்தை) அறிகின்றது. வாய் (ஜிஹ்வா) ஆகிய பொறி வழியாகச் சுவையை (ரசத்தை) அறிகின்றது. கண் (சக்ஷு) ஆகிய பொறிவழியாக ஒளியை (ரூபத்தை) அறிகின்றது. மூக்கு (ஆக்கிராணம்) ஆகிய பொறிவழியாக நாற்றத்தை (கந்தத்தை) அறிகின்றது. காது (சுரோத்திரம்) ஆகிய பொறிவழியாக ஒலியை (சப்தத்தை) அறிகின்றது. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தும் புலன் (விஷயங்)கள். மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்தும் பொறி (இந்திரியங்)கள். இப்பொறிகள் ஆன்மா புறப் பொருள்களை அறிதற்குதவுங் கருவிகளாதலின், ஞானேந் திரியங்கள் என்று சொல்லுவதுண்டு. ஐம்பொறிகளால் ஞானம்மட்டும் வரும். தொழிலும் விருப்பும் வாரா. அதனால், அறிவு, தொழில், விருப்பு மூன்றுமுடைய ஆன்மா வேறும்.

ஐம்பொறிகளும் ஒன்று அறிந்த விஷயத்தை மற்றொன்று அறியாதன. கண்ணுக்குத் தெரியும் வடிவம், காது முதலிய மற்றைய நான்கிற்கும் தெரியாது. காதுக்கு வரும் ஓசை, கண் முதலியவற்றால் அறியப்படாது. இப்படியே மற்றைய மும்பொறிக்கும் காண்க.

ஐந்து பொறிகளின் வழியாலும் ஐந்து புலன்களையும் அறிந்து வருவது ஓரான்மாவே. ஒரே உடலில் ஐந்து ஆன் மாக்கள் ஒருசேரத் தங்கி ஐம்பொறிகளாலும் ஐம்புலன் களையும் தனித்தனி அடைகின்றன என்று சொல்லுவது பொருந்தாது. அப்படி ஓர் உடலுள் ஐந்து ஆன்மாக்கள் இருந்தால், கண்ணுக்குவந்த குற்றத்தால் துன்பமும், காதுக்கு வந்த நலத்தால் இன்பமும், நாவிற்கு வந்த இன்சுவையால்

விருப்பமும், மூக்குக்கு வந்த தீநாற்றத்தால் வெறுப்பும், மெய்க்கு நேர்ந்த இடையூற்றால் வருத்தமும் ஒரேகாலத்தில் அடைந்தாகவேண்டும், ஒரேகாலத்தில் ஒரே நாக்கின்வழியாக ஐந்து ஆன்மாக்களும் ஒருசேர ஆறுசுவையுள், தாம்வேண்டிய சுவைகளைக் கவர்தல்வேண்டும். அவ்வாறு சம்பவிக்குமோ? ஒருகாலும் சம்பவிக்காது.

ஒருதலைக்கு ஆன்மா ஐந்து உண்டு என்றுகொண்டு, நான்முகனுக்கும், சண்முகனுக்கும், தசமுகனுக்கும் பெருக்கி, முறையே இருபது, முப்பது, ஐம்பது ஆன்மாக்களாகச் சொல்லலாமோ? ஓர் உடம்பில் ஓர் ஆன்மாவே இருப்பது அநுபவசித்தம். பொய்யுணர்ச்சியால் பல ஆன்மா உண்டு என்று தோன்றினாலும், மெய்யுணர்ச்சி நேர்ந்தபோது அப் பொய்யுணர்ச்சி விலகிப்போம்.

கனவு கண்டதும் ஆன்மாவே; உடம்பல்ல. நனவில் அறிவதும் ஆன்மாவே; உடம்பல்ல. உடம்பே கனவு கண்டதாயின், நனவில் அவ்வுடம்பு மயங்கியறியக் காரணமில்லை. கண்டபடியே அறியவேண்டும். ஆன்மாவே கனவு கண்டதனால், உடம்பின் உள்ளேயும் உடம்பின் வெளியேயும் செல்லுதற்கு உரிய அவ்வான்மா மயங்கி அறியலாயிற்று. ஆகவே, நுண்ணிய உடம்பே (சூக்குமதேகமே) பருத்த உடம்பினுள் (ஸ்தூல தேகத்துள்) நின்று பொறிகளை வெளியில் போக்கி அறியும் என்பது பொருந்தாது.

நனவு பருத்தவுடம்பில் நடப்பது. கனவு நுண்ணிய உடம்பில் நடப்பது. இரண்டு உடம்பிலும் ஆன்மா போக்கும் வரவும் செய்வதால், கண்டபடி அறியவும் மயங்கி அறியவும் கூடும். அதனால், நுண்ணிய உடம்பிற்கு வேறுக இருப்பது ஆன்மா.

பிணமாகக்கிடக்கும் உடம்பில் உறுப்பு ஒன்றும் குறையவில்லை. எல்லாவுறுப்புக்களும் இருந்தும் அப்பிணம் ஒன்றையும் அறிவதில்லை. அதனாலும் உடம்பிற்கு வேறுக ஆன்மா வுண்டு என்று தெரிகின்றது. தேகத்தில் அவயவங்கள் எல்லாம்

(குறைவில்லாமல்) இருக்கும் நிலைமை பிணத்திற்கும் உண்டு. பிணமான பின்பு அவயவக்குறைவு ஏற்படாமல் இருந்தும் அறிவு நிகழவில்லை. அதனாலும் 'உடம்பே அறியும், உடம் பிற்கு வேறுக உயிர் இல்லை' என்ற சிலர்கொள்கை தவறுனது என்று அறியலாம். பிராணவாயுவே ஆன்மா. ஆன்மா என்று வேறு இல்லை என்று துணிவதும் உண்டு, அத்துணிவும் மெய்யான துணிவாகாது. பொய்த்துணிவே.

தூங்கியபோதும் இன்பத்தையும், துன்பத்தையும் ஆன்மா அநுபவிக்கின்றது. 'சுகமாத் தூங்கினேன்' என்ற அநுபவம் அதை மெய்ப்பிக்கும். பிராணவாயு நமக்கு விழிப் பில் இயங்குவதுபோலத் தூக்கத்திலும் இயங்குகின்றது

உடம்பில் இருந்த காற்று (பிராணவாயு) வெளிப்பட்ட தால், உடம்புக்கு அறியும் தன்மை ஒழிந்தது. இருந்த காற்று வெளிப்படாமல் இருந்தபடி இருந்தால் உடம்பிற்கு அறியுந் தன்மை ஒழியாது என்பதே அவர் கொள்கை. மண், நீர், நெருப்பு, விண் (ஆகாயம்) ஆகிய நான்கும் வெளிப்படாமல் இருந்தால் உடம்பே அறியும் என்றும் கூறுவர். அது ஆராய்ச்சியில்லாத கூற்றே என்பது எளிதில் தெரியும். காற்று, விண், தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களுள் யாதும் குறையாமல் கிடக்கும் நிலைமை தூக்கத்திலும் உண்டு. அப் போது அறிவு நிகழவில்லையே! உடம்பே அறியுமானால் தூக்கத்தில் அறியாதது ஏன்?

ஐம்பொருளும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) பிண மாகும்போது கெட்டுவிடும். சுவை கெடாமல் உடம்பில் நின்றால் ஐம்பொறிகளே அறியும். அவ்வறிவும் நனவில் நிகழ்வதே. தூக்கத்தில் நிகழாது. தூக்கத்தில் ஐம்பொறி களும் அறியாமல் ஒடுங்கி நிற்கும்.

நனவிலும் ஒவ்வொரு பொறியாய்த்தான் அறியும். மொத்தமாய் அறியமாட்டா,

ஒவ்வொரு பொறியாய் அறிவதிலும், ஒரு பொறி அறிந்ததை மற்றைப்பொறி அறியாது. கண்ணுக்குத் தெரிந்தது மற்றவற்றிற்குத் தெரியாது. இதுபோல மற்றவற்றிலும். இதை முன்னும் குறித்தோம்.

ஐம்பொறிகளையும் கொண்டு ஐம்புலன்களையும் அறிவது ஒன்று உண்டு. அதுவே ஆன்மா.

பிராணவாயு சஞ்சாரம் செய்தால்தான் அறிவு உண்டாகக் காண்கின்றோம். இன்பமோ துன்பமோ அநுபவிக்கும் நிலைமையும், உடம்புக்கு அசைவும் பிராணவாயு இல்லையானால் இல்லை. அதனால் பிராணவாயுவே ஆன்மா. அதற்கு வேறாக ஆன்மா ஒன்றுமில்லை. அவர் ஐம்பொறிகளையும் கொண்டு அறிவது அப்பிராணவாயுவேயாகும். தூக்கத்தில் அப்பிராணவாயு சஞ்சரித்தும், ஐம்பொறிகளாகிய கருவிகளின் தொடர்பு நீங்கினதால் அறியாதாயிற்று என்று சிலர் கொள்வர். அதுவும் பொருந்தாத கொள்கையே.

பிராணவாயுவுக்கு ஐம்பொறிகள் கருவிகள். அக்கருவிகளைக்கொண்டு காரியத்தைச் செய்யும் தலைமை அவ்வாயுவுக்கு உண்டு. தலைமையுடைய பிராணவாயு சஞ்சரிக்கும் போது அதன் கருவிகளாகிய ஐம்பொறிகளும் நீங்குமோ? நீங்கலாமோ? நீங்கினால், அவற்றை நீங்கவிடாமல் நிறுத்தும் ஆற்றல் அவ்வாயுவுக்கு இல்லை என்றுதானே விளங்கும். விளங்கவே அவ்வைம்பொறிகளையும் அப்பிராணவாயுவையும் கொண்டு அறிவது வேறு ஒன்று உண்டு என்று பெறப்படும்.

இதுவரையில், ஆன்மா உண்டு என்பதும், அந்த ஆன்மா, தேகம், இந்திரியம், பிராணவாயு முதலியவற்றின் வேறு என்பதும் விளக்கப்பட்டது.

சுவைவிளக்கம்

வித்துவான், திரு. நா. பார்த்தசாரதி,
(தமிழாசிரியர், சேதுபதி கலாசாலை, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.)

பொறிபுலன்களால் நுகர்ச்சி செய்வதற்குரிய யாவும் சுவைகளே. புலனுக்கும் சுவைக்கப்படுகிற பொருளுக்கும் இடையே உள்ள ஈடுபாடே சுவையுணர்ச்சி. மெய்ப்பாடு, பாவம், சத்துவம் என்னும் சொற்களும் சுவைப்பொருள் உடையன. சுவை இரண்டு பகுதியாகப் பிரியும். சுவைத் தோன், சுவைக்கப்பட்ட பொருள் என்பனவே அவ்விருபகுதி. சுவைத்ததற்குப் பின்னர் சுவைத்தோனிடத்தில் நிகழ்கின்ற கண்ணீர்விடுதல், மெய்மயிர்சிலிர்த்தல் போன்ற வேறுபாடு களைச் சத்துவம் என்று குறிப்பிடுவர். சுவைத்தோனுடைய உள்ளத்தில் அச்சுவையினால் நிகழுங் குறிப்பைப் 'பாவம்' என்று குறிப்பிடுவர். ஆகச் சுவையானது, சுவைக்கப்படு பொருள், சுவைக்கின்ற பொறியுணர்வு, சுவைப்போன் மனே பாவம், அவன்புறத்தில் நிகழும் சத்துவவேறுபாடுகள் என நான்கு வகையாக விரிந்து நிகழ்கின்றது. இவை சுவையின் வகைகளைப் பற்றிய ஒரு சில செய்திகள். இனிச் சுவையின் தோற்றத்தைப்பற்றி ஆராய்வோம்.

சுவைகள் யாவும், ஆடல் பாடல் முதலிய நாடக வினை யாடல்களில் இருந்து தோன்றின என்பர் ஆசிரியர் தொல்காப் பியர். குறுநிலமன்னரும் முடியுடை வேந்தரும் நாடகமகளிர் இயற்றும் நவரஸங்களுக்கும் இலக்காகிய ஆடல் பாடல் முதலியவற்றுள் தோன்றுவனவாகிய முப்பத்திரண்டு சுவை விரிவும் பதினாறு ஆகி அடங்கும் என்பது தொல்காப்பியர் கருத்து.

"பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப."

(மெய்ப்பாட்டியல் 1.)

பண்ணை - ஆடல் பாடல் முதலிய விளையாட்டுக்கள்; எண் நான்கு - முப்பத்திரண்டு; நால்நான்கு - பதினாறு; கண்ணிய - கருதப்பட்ட; புறன் - சுவைப்பொருளின்பகுதி.

ஆசிரியர் தொல்காப்பியர் எட்டுச்சுவைகளே கூறினர். சாந்தரஸத்தை அவர் கூறவில்லை சாந்த ரஸத்தைத் தமிழ் நூலார் 'சமனிலை' என்று கூறுவர். "சாந்தரஸம் சாதாரண உலகமக்களிடத்தில் இல்லாமல் உலகியலிலிருந்து விலகித் தாம் வகுத்துக்கொண்ட குறிக்கோள் நோக்கிச் செல்லும் உலகியல் நீங்கினவர்களுடைய இயல்பு ஆதலால் அதைத் தொல்காப்பியர் கூறவில்லை" என்பது உரைகாரராகிய பேராசிரியர் கருத்து. பேராசிரியர் கூறியவாறன்றி வேறு ஒரு சிறந்த முறையிலே ஆசிரியர் சமனிலைச் சுவை கூறுமைக்கு அமைதி கூறமுடியும். பேராசிரியர் கூறுகின்றபடியே "உலகியல் நீங்கிய சான்றோர் இயல்பாயின், சான்றாண்மை கல்வியால் வருவது; கல்வி, பெருமிதச் சுவையுள்ளே அடங்கும். அடங்கவே கல்வியாகிய பெருமிதம் உடையார் சமனிலை எனப்படும் சாந்தமாகிய நடுவுநிலை உடையவராகவே இருத்தல் வேண்டும், இல்லாதவரெனின் அவர்க்குப் பெருமிதம் ஒரு தலையாக இல்லை" ஆகவே பெருமிதமென்னும் ஆறுவது சுவையில் சமனிலையும் ஒருவாற்றால் அடங்குதலினால் தொல்காப்பியர் அதனைத் தனியே கூறாராயினர் என்பது பொருந்திச் சிறக்கும். இனி,

"ஆங்கவை ஒருபாலாக ஒருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்"

* * * * ஷை 12

என்னும் மெய்ப்பாட்டியலின் பிற்பகுதியிலுள்ள, "பிற வகையால் வருகின்ற மெய்ப்பாடுகளைக் கூறும் சூத்திரத்தில் உலகியல்நீங்கினர் இயல்பாக, 'நடுவுநிலை' எனச் சமனிலைச் சுவையைக் கூறினர் எனினும் அமையும். இன்னும் பேராசிரியரே இச்சூத்திரவுரையில், "நடுவுநிலை என்பது ஒன்பது சுவையுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படுஞ் சமனிலை. அஃதாவது, செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடா நிலைமை." அது காமம் வெகுளி மயக்கம் நீங்கினர்கண்ணே நிகழ்வது. சிறுவரவிற் முகலான் அவற்றொடு கூறினன்" எனக்கூறி அமைக்கின்றார்.

உலகியல் நீங்கினர் இயல்பு என்று கூறிய பேராசிரியரே இங்கே "ஒன்பது சுவையுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படுவது" என்றும் கூறியிருக்கின்றார். இஃது இவ்வாறு இருக்க,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப" ஷை 3

என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் எட்டுச்சுவையும், பதினறும் முப்பத்திரண்டும் ஆவது எவ்வாறு என்று காண்போம். நகை எழுவாயாக உவகைகாறும் உள்ள எட்டுச் சுவையும் சுவைக்கப்படுபொருள், சுவைக்கின்ற பொறியுணர்வு, சுவைக்கும் மனோபாவம், சுவைப்பால் புறத்தே தோன்றும் சத்துவங்கள் என்னும் நான்கனோடும் உறழ முப்பத்திரண்டாகும். சுவைக்கப்படும் பொருளும் சுவையுணர்வும் என்னும் இரண்டனுள் ஏனையவற்றையும் அடக்கி எண்சுவைகளையும் உறழ்தரச் சுவை பதினறு ஆகும். இறுதியாக ஆராய்ந்து முடித்தால் அவை எட்டும் எட்டுச் சுவைகளென்ற எல்லைக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன.

"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" ஷை 2

"நாலிரண்டாகும் பாலும் என்று சிறப்பித்ததனால் எட்டா தலேயன்றி ஒன்பதுமாகும் என்னும் பிறர் மதத்தையும் ஆசிரியர் இங்கே தொனிப்பிக்கிறார்." பேராசிரியரும் இவ் வாறே கூறினர்.

இனிப் பழந்தமிழ் நாடக நூலாசிரியராகிய செயிற்றிய னார் என்பார், சுவையுணர்வையும் சுவைப்பொருளையும் ஒன்றாக்கிச் சுவை, குறிப்பு, சத்துவமென மூவகைப் பாகு பாடுசெய்து எண்சுவையோடு பெருக்கி இருபத்துநான்கு பிரிவாகக் கொண்டார். கொண்டாரேனும் எட்டினுள் அடங்குமென இறுதியில் உடன்பட்டார். வேறு நாடகநூலா சிரியர் சிலர் சமனிலை என்னும் ஒன்பதாஞ் சுவையையும்

கூறி, இம்மூன்று விரிகளோடும் உறழ்ந்து இருபத்தேழு எனக் கூறுவர். இனி, இவ்வொன்பது சுவைகளின் அமைதியும் நாடகநூலிற்கு இன்றியமையாததாகலின் நாடக நூலாசிரியராகிய செயிற்றியனாரும் இருபத்தேழு சுவையே வேண்டினர் என்று கூறினாலும் தவறில்லை. இதுவரை சுவையின் முறைதுறைகளை ஒருவாறு விளக்கி வரைந்தோம். இனிச் சுவையின் இயல்புகளையும் அவைகளை அம்முறையே வைத்தமைக்கும் உரிய காரணங்களை ஆராய்ச்சிச் சான்றுகளோடு விளக்க முற்படுவோம்.

நகை எனப்படுவது சிரிப்பு. அது முறுவல், புன்னகை, பெருநகை என நிகழ்கின்ற முறைமையால் மூவகைப்படும். அழுகை எனப்படுவது அவலச்சுவை. அவலமெனச் சுவையின்பெயர்கூறுமல் அழுகை என அச்சுவைக்குரிய மெய்ப்பாட்டாற் பெயர்கூறினர் ஆசிரியர். அவலச்சுவை பிறர் அவலங்கண்டவழியும் தானேயவலமுற்றவழியும் ஆகிய இரு நிலைமைக்கண்ணும் தோன்றும். இவற்றுள் பிறர் அவலங்கண்டவழித் தோன்றும் சுவையைக் கருணை என வேறு ஒரு சுவையாக வழங்குவர் வடமொழிவாணர். தொல்காப்பியர் அவலச்சுவையினுள் அதனை அடக்கி ஓதினர் எனல் சாலப் பொருந்தும். அல்லது கருணை அவலம் என இருகூறு செய்து பிறன்கோள் புலப்படுத்துவாராயினர் எனினும் அமையும். இளிவரல் என்பது இழிவுச்சுவை. இரக்கம் என்றாலும் ஒருவாறு இளிவரற்சுவையினைக் குறிக்கும். மருட்கை என்பது வியப்புச்சுவை. அற்புதம் என்று வழங்கப்படுவதும் இதுவே. அச்சம் என்பது பயச்சுவை. பெருமிதம் என்பது தான் பிறத்தற்குரிய மிகுதி உண்டாயவழித் தோன்றுகின்ற வீரம். கல்வி வீரம், போர் வீரம், இசை வீரம், கொடை வீரம் என அது இங்ஙான்கும் நிலைக்களனைப் பிறக்கும் இயல்பினது. இன்பம் பொருள் இவற்றின் பொருட்டுப் பழி வருவன செய்யாத புகழ்நிலையாம் இசை எனப்படுவது. வெகுளி என்பது கோபச்சுவை. வடமொழியாளர் ரௌத்திரம் என்பதும் அதுவே. உவகை என்பது இன்பம் முதலியன காரணமாகப் பிறப்பதோர்மகிழ்ச்சி. முன்னதாகிய

நகையோடு தொடர்புடையது உவகை. இவ்வெண்வகை மெய்ப்பாடுகளைச் சுவை, குறிப்பு என்ற பெயர்களாலும் கூறலாம் குறிப்பான் உணரப்படும் காரணமும் நெறிப்பாடும் உடைமையின். இனி நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என இவற்றை இவ்வாறு வரிசைப்படுத்திய ஆசிரியர் யாதானுமோரோர் காரணம்பற்றியன்றே வரிசைப்படுத்தியிருத்தல் வேண்டும். அக்காரணங்களை ஒருவாறு இப்போது உய்த்துணரமுற்படுதல் வேண்டும்.

மெய்ப்பாடு எல்லாவற்றுள்ளும் புலப்படுதற்கண் விளக்க முடைமை பற்றியும், சிறந்தமைபற்றியும் விளையாடலின்கண் தோன்றிய முதன்மையோடு இயைபு உடைமை பற்றியும் நகைச்சுவையை முன்வைத்தார். இவ்வாறன்றி மேற்கிளந் தோதிய பொருளதிகாரத்து அகப்பொருட்கு நெருங்கிய தொடர்புடைமைபற்றியும் பொதுவாகப் புறப்பொருட்கும் ஒருவாறு சார்புடைமைபற்றியும் முதல்வைத்தார் எனினும் பொருந்தும். இனிச் சுவைகளினுள் இதுவே மங்கலம் மிக்க தாகலின் முற்கூறினர் என்றுரை அக்கூற்றில் ஓர் சிறப்பின்மை யின் பொருந்தாது. நகைச்சுவைக்கு மறுதலையாகலின் அழுகை என்னும் அவலத்தை அதன்பின்வைத்தார், அல்லது இன்பியல், துன்பியல் இருபாகுபாடும் சுவைகட்குத் தலைமை பூண்டு நிற்றலின் சிறப்பிற்குரிய இன்பியல் கூறித் துன்பியல் கூறினர் என்று சொல்லுதலும் பொருந்தும். இவ்வாறு நாடகநிலையுள் வேண்டப்படும் சுவை தலைமைபற்றி இரண்டே என்று (Tragedy), (Comedy) என வேண்டுவார் மேல்புல நூலாரும். யாங்ஙனமெனின் உவகை பெருமிதம் என்பன நகையினுள்ளும், இளிவரல் அச்சம் என்பன அழுகையின் கண்ணும், மருட்கை வெகுளி என்பன அவ்விரண்டன் கண்ணும்பட்டு எட்டுச் சுவையின் இயக்கமும் இன்பியல், துன்பியல் என்னும் நாடகநிலை முடிவான இரண்டு சுவை களுள் அடங்கிவிடும். உவகையின் பிறப்பகம் நகையாகலா னும், பெருமிதம் என்பது இறுமாப்பொடு பீடுபட்டதொரு உவகையே ஆகலானும், அவ்விரண்டும் நகையினுள்ளே

அடங்கும் என்பது. இளிவரல், அழுகை புலப்படாது தோன்றும் ஒருவகைக் குறிப்பொடு நெறிப்படும் அவலமே ஆதலானும் அச்சம் என்பது "இனி என்ன அவலம் நிகழுமோ?" என அவலத்தை எதிர்நோக்கிநிற்கப் பிறக்கு மோர் சுவையே ஆதலானும் அவ்விரண்டும் அழுகையுள் அடங்கும் என்பது. மருட்கை என்னும் வியப்புச் சுவை உவகை, பெருமிதம், அச்சம் முதலிய யாவும் அடிப்பட நிகழ்வதாகலின் இன்பியல் துன்பியலாகிய நகை, அழுகை இரண்டனுள்ளும் அடங்கும் என்பது. வெகுளிச்சுவை தன்னை மாற்றான் நக்கவழியும், தன்மாற்றான் உவந்தவழியும், அவன் பெருத்த இறுமாப்பெய்துவழியும் தோன்றுவதே போல, எஞ்ஞான்றும் தான் வாழ்ந்த முற்செல்வநிலை எண்ணி இளிவரற்காலத்துத் தமரொடு வெகுளலும், அச்சக்காலத்துக் காரணமின்றி வெகுளலும், அவலக்காலத்துத் தான் அவ் வவலமெய்தச் செய்தாரை வெகுளலும் என இருமை நிலை யினும் பிறப்பதால் இரண்டனுள்ளும் பட்டு அடங்கும் என்பது. ஆக இவ்வாறு ஏனைய ஆறும் தம்முள் அடங்குதல் என்னும் தலைமைகொண்டமையால் "நகையே அழுகை" என இன்பியல், துன்பியலான அவ்விரண்டையும் முன் வைத்தார் என்பது. அழுகைக்குப்பின் இளிவரல் வைத்தது அழுகை வெளிப்படையாய் நிகழும் அவலமெய்ப்பாடு என் பதையும் இளிவரல் குறிப்பாற் புலப்படும் இரக்கமெய்ப்பாடு என்பதையும் அறிவித்தற்கே ஆகும் ஏனெனின் இரக்கம் என்பதும் அழமாட்டாததோர் அவலநிலையாகும். அவ் வியைபு நோக்கியே அழுகையின்பின் இளிவரற்சுவை வைக்கப் பட்டது. "இவர்க்கும் இவ்வவலம் வந்ததோ?" "விதி கொடிதன்றே?" எனவும், "பாலும் கொழுங்கனியும் உண்டவாய் புற்கையும் உண்ணவந்ததோ?" என அவலம் பற்றியும் இளிவரல்பற்றியும் வியப்புச்சுவை பிறப்பதாலும் அடுத்துநிற்கும் அச்சத்தின் காரணமாக இருப்பது பெரும் பாலும் வியப்புச் சுவையே ஆகலானும், அச்சத்திற்கும் இளிவரலுக்கும் இடையே வியப்புச்சுவை வைக்கப்பட்டது. முன்னர் உணர்த்தப்பட்ட அவலம், வியப்பு என்னும் இரு மெய்ப்பாடும் அடிப்பட நிகழ்தலானும், முன்னர் உணர்த்த

இருக்கும் பெருமிதத்தோடு மாறுபட்டதாகலானும் அச்சச் சுவை வியப்பிற்கும் பெருமிதத்திற்கும் இடையே தந்துரைக்கப் பட்டது. மேற்கூறிய இளிவரல் அச்சம் என்னும் இரண்டு மெய்ப்பாடும் சிறிதுந்துணைப்படாவண்ணம் நிகழ்வதாலும் முன்னதாகிய அச்சத்தோடு மாறுகோடலானும், பிறர்கண்டு வியத்தற்காரணமாகிய வியப்புச் சுவைக்கு நிலைக்களனான கல்விமிகுதி கொடைமிகுதி முதலியன உள்ளதாகையாலும் பெருமிதச்சுவை அச்சத்திற்கும் வெகுளிக்கும் இடையே வைக்கப்பட்டது. வீரம் முதலிய பெருமிதம் காரணமாக மாற்றூர்க்குத் தோன்றலானும், பின்நிற்கும் உவகையோடு வேறுபடுதலானும் வெகுளிச்சுவை பெருமிதத்திற்கும் உவகைக்கும் இடையே உரைக்கப்பட்டது. இனிப் பெருமிதம் உடையார்க்குத் தோன்றுதென்பது தோன்றவும் உவகைக்கு மறுதலை என்பதும் உவகையில்வழிப் பிறப்பது என்பதும் விளங்கவும் இங்ஙனம் இடைவைத்தார் எனினும் அஃது ஒருவாறு அமையும். மெய்ப்பாடு எல்லாவற்றுள்ளும் நகையைப் போலப் புலப்படுதற்கண் விளக்கமுடைமைபற்றியும் நகையோடு பேரியைவுடைமைபற்றியும், முன்னின்ற வெகுளிக்குச் சிறிதும் இயைபின்மைபற்றியும், வெகுளியில்வழித் தோன்றுவதென்பதுபற்றியும், உவகையென்னும் நகையையும் தன்னுட்படுத்தும் சிறப்புடைமைபற்றியும் உவகை இறுதியில்வைத்துக் கூறப்பட்டது. இவை சுவை வைப்பு முறைக்கு விளக்கம்.

இனி ஒன்பதாவதாக ஏனையோர் வேண்டுவதும் நாடக நிலையுள் ஒன்றெனக் கொள்ளப்படுவதுமாகிய சமநிலைச் சுவைக்கு ஏனைச் சுவைகளுக்குள்ளதுபோல மெய்யின்கண் நிகழும் சத்துவவேறுபாடு இன்மையின் ஆசிரியர் தொல்காப்பியர் அதனைக் கூறுராயினர் என்னுங்கருத்துப் பேராசிரியருக்கு இருந்ததாகத் தெரிகிறது. "மற்றிவ் வெட்டனுடனுஞ் சமநிலைகூட்டிச் சுவை ஒன்பதென்னுமோ நாடக நூலுட் போலவெனின் அதற்கு ஓர் விகாரமின்மையான் ஈண்டுக் கூறியது இலன் என்பது" என்றூர் பேராசிரியர். ஏனைச் சுவைகளைப் போலன்றி அமைதியே சமநிலைச் சுவைக்கு

மெய்ப்பாடாகலான் விகாரமின்மையாகிய அமைதியே அதற்குரிய விகாரமாகிய சத்துவ வேறுபாடெனப்படும். என்னை? ஏனையனபோல இயல்பால் நிகழுஞ் சத்துவங்களை நிகழா வண்ணங் காத்தொழுகும் விகாரமின்மையும் அவையிற்றை நோக்க விகாரமே யாதலினென்க. "அதற்கு விகாரமுண்டு எனின் முன்னை எட்டனுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப் படும்" என்று இலேசான் உடம்பட்டார் பேராசிரியரும். அமைதிச்சுவைக்கு அமைதியே விகார சத்துவமாதலின் அவை யிற்றோடு சார்த்திக்கோடல் அத்துணைச் சிறப்பின்றுதலின் தனித்து நின்றியலும் ஆற்றலது எனலே சாலப்பொருந்தும். நாடக நிலையுள் இவ்வமைதிச்சுவை வேண்டப்படுவதும் அவ் வமைதியாகிய மெய்ப்பாடு குறித்தேயாம். மெய்ப்பாடின்று எனின் நாடகநிலையுள் வேண்டப்படுமெனல் பொருந்தாது ஆகலின் அமைதிச்சுவைக்கு விகார மின்மையாகிய அதுவே சத்துவ விகாரமாய் மெய்ப்பாடு புலப்படுத்தும் என்பதாம். நிற்க. "உலகியல் நீங்கினர் பெற்றியாகலின் ஈண்டு உலக வழக்கினுட் சொல்லியதிலனென்பது" என்றார் பேராசிரிய ரெனின் உலகியல் நீங்கினர் பெற்றியாகிய சமனிலையும் உலகிய லோடு தொடர்புடைய ஒன்றுகலானும், உலகியலுள் நாடக நிலையுள் வேண்டப்படுதலானும், பொருளதிகாரத்து அகத் திணையியல், புறத்திணையியல்களுள் உலகியல்நீங்கினர் பெற்றி பிரக்க ஆசிரியராற் கூறப்படுதலானும் அதனால் ஆசிரியர் கூற்றாயினர் என்பது ஒருவாறு பொருந்துதலின்று. அன்றியும் பெருமிதத்துட் சிலவும் உலகியல் நீங்கினர் பெற்றியாகலிற் கூறுமைவேண்டும். இச்சொல்லிய காரணங்களான், பெரு மிதத்துள் அடங்கும் என்னுங் கருத்தினலாதல், "உடைமை இன்புறல் நடுவுநிலை" எனப் பிற்கூற அமையும் என்னுங் கருத்தினலாதல் ஆசிரியர் சமநிலைச் சுவை கூற்றாயினர் என்பதே இயைந்து நின்று பொருத்தமாக அமைவதாம்.

திருவாதவூரரும் தேனிசையனும்

(திரு. மு. அருணசலம் IV B. A., (Hons), அண்ணாமலைநகர்.)

தன்னேரில்லா இத்தெய்வத்தமிழ்நாட்டின்கண் தோன்றி, தித்திக்கும் செந்தமிழிற் பாக்கள் பாடி, சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பாடுபட்ட பெருந்தகையே நமது மணிவாசகப்பெருமான் ஆவர். அவர் அன்புக்கடலில் திளைத்தவர். அவர் அன்பானர்; அன்பு அவராயிற்று. 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்!' கண்ணீர்பெருகக் கூத்தன்பால் கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளம் உருகினர். இதுவே போன்று ஆண்டவனை அடைவதற்காக உள்ளம் நெக்கு நெக்காக உருகிய மேனாட்டு உள்ளமும் ஒன்று உண்டு! இனி இரு அன்புள்ளங்களையும் ஒப்புநோக்குவாம்.

அடைக்கலமாக அடிகளார் இறைவனை அடைந்தார். இறைவனும் அருளார் அமுதை வழங்கினன். பசிதாகம் மிகுந்திருந்தமையால் அவ்வமுதை வாரி அடிகளார் வீழுங்கப் போனர். ஆனல், சிவானந்த இன்பத்தினை முழுதும் அனுபவிக்க அவருக்கு இயலாது போனதாம். ஆராவமுதை உண்ணும் நல்லூழின்மையால் தொண்டையானது சிறிதே விக்கிக்கொண்டதாம். "எல்லாம் வல்ல எம்பெருமானே! இதுவும் நின்திருவினையாட்டோ! தேனன்ன தண்ணீர் தந்து உய்யக்கொள்ளாய்" என்று இறைவனை நோக்கி அடிகளார் வேண்டுகின்றார். விக்கிக்கொண்ட அமுதின் சுவையினை வெறுந்தண்ணீர் கெடுக்கக்கூடும் என்ற எண்ணத்தால் அதுவும் கெடுதல் ஆகாதென்பார் தேனினையொத்த தண்ணீர் கொடுத்து எனக்கு உய்யும் வழி காட்டுவாயாக" என்று அழுங்குகின்றார்.

இவ்விடத்தே மேனாட்டுப் புலவர் ஒருவரின் வாக்கும் ஒப்புநோக்கத்தக்கதேயாம். மணிவாசகப் பெருமான் எவ்வளவோ இன்னல்களைக்கடந்து இறுதியில் ஞான அமுதத்தை அள்ளிப்பருகும்போது தொண்டை விக்கிக்கொண்டது.

தேனிசையன் (Tennyson) என்னும் மேனாட்டுப் புலவர் பெருமகனாரும், தனது வாழ்க்கையில் பெரும் போராட்டங்களையெல்லாம் எதிர்த்துநின்று, பல்வகைத் துன்பங்களையும் அனுபவித்துச் சலித்துப்போய் இறுதியில் ஆண்டவனது அருட்கோயிலை நாடி ஓடினார். அவரது ஊழ்வினை அங்கேயும் தடுத்தது. ஆண்டவனது திருவாயிலினை அடைந்துவிட்டார்! ஆனால் வாயிற்கதவுகள் தாளிடப்பட்டுவிட்டன! "சுற்றிலும் கம்மிருட்டு! வெளிப்புறத்தே ஒளியில்லை! குளிரும் இருட்டும் கொடுமைப்படுத்துகின்றன! உள்ளேயோ ஞானதீபம் எரிந்து கொண்டிருக்கின்றது. இனிமையே உருவான அந்தத் தண்ணொளிப் பிழம்பினை நாம் கண்டுகளித்தல் ஆகாதோ? செல்வோம்! உட்சென்று அப்பொல்லாமணியின் அன்பே யுருவான, இனிமைபயக்கும் கழலினைகளை முத்தமிடுவோம்" என்று கூறிக்கொண்டே உள்ளே செல்ல விழைகின்றது அவருள்ளம்! ஆனால் எங்கிருந்தோ "முடியாது! முடியாது ஐயனே! மிகவும் நாழிகையாகிவிட்டது! இனி உள்ளேசெல்ல இயலாது" என்று ஒரு குரலெழுப்பித் தேனிசையனைத் திகைக்கவைக்கின்றது. இதோ அப்பாடல்:-

"No light: so late! and dark and chill the night!
O let us in, that we may find the light!
Too late, too late! ye cannot enter now.
'Have we not heard the bridegroom is so sweet?
O let us in, the' late, to kiss his feet!
No, no, too late! ye cannot enter now!"

— Tennyson.

எனவே, ஆனந்தக்கூத்தனின் ஆராவமுதம் கிடைத்தும் அதனை உண்ணுதற்கு இயலாது விக்கலெடுத்து வருந்திய மணிவாசகப்பெருமானின் நிலையும், இறைவனின் திருக் கோயில் வாயிலினையடைந்தும் உட்சென்று ஞானவொளி யினைக்காண இயலாதுபோன தேனிசையனின் நிலையும் அறிஞருலகம் ஒப்புநோக்கி இன்புறத்தக்கனவாம்.

அர்ச்சனைகள்

சிவாகமவித்துவான், பிரமஶ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார்,
தலைமைப்பேராசிரியர், சிவாகமபாடசாலை, தருமபுரம்.

श्रवणं कीर्त्तनं शम्भोः स्मरणं पादसेवनं ।
अर्पनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥

நாடு செழிக்கவேண்டும்; நமக்குச் செல்வம் செழிக்க வேண்டும்; எல்லோரும் இன்பமாக வாழவேண்டும். இதற்கு மனிதமுயற்சிமட்டும் போதாது; கடவுள் அருளும் வேண்டும் என்பது எல்லோரும் அறிந்த ரகசியம். கடவுள் அருளைப் பெற பக்திசெய்தலே சிறந்த சாதனம். பக்திசெய்யப் பல வழிகள் உண்டு. ஒன்று, இறைவனுடைய புண்ணிய சரித் திரங்களைச் சதாகேட்டல்; இரண்டு, அனுபவஞானிகள் அருளிச்செய்த தேவாரம், திருவாசகம் போன்ற தோத்திரங் களைச் சொல்லித் துதித்தல்; மூன்று, இடைவிடாது தியா னித்தல்; நான்கு, இறைவன் திருவடிகளைச் சேவித்தல்; ஐந்து, உயர்ந்த புஷ்பங்களைப் பக்தியோடு தாமே எடுத்துக் கொண்டுவந்து அருச்சனைசெய்தல்; ஆறு, வணங்குதல்; ஏழு, இறைவனுக்கு என்றும் மீளா ஆளாய் அடிமைபண்ணுதல்; எட்டு, இறைவற்குத் தோழனுதல்; ஒன்பது, தன்னையே காணிக்கையாக அளித்தல். இவற்றுள் அருச்சனை என்பதும் ஒன்றல்லவா! இறைவனுடைய பஞ்சகிருத்ய லீலாவினோ தங்களைச் சொல்லும் புராண வரலாறுகளை அடக்கிய பெயர் களையும், வீரபராக்ரமங்களால் விளைந்த பெயர்களையும் அவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் அனுக்ரகங்களால் விளைந்த பெயர்களையும் சொல்லச்சொல்ல அருச்சிப்பவன் மனம் அவை களில் ஈடுபட்டு ஆண்டவன் திருவடிகளை உறுதியாகப் பற்றி நிற்கும் அல்லவா? உதாரணமாக காலாகாலாய நம: என்று நினைத்தவுடன் "சங்கவெண் குழையோர்காதிற் கோமாற்கே ஆளானேம் ஆகையால் நமனை அஞ்சோம்" என்ற உறுதி யல்லவா பிறக்கிறது! தத்வாதீதமூர்த்தயே நம: என்றதைக் கேட்டவுடன் பரமேசுவரன் மண்முதல் நாதம் ஈறுகிய

தத்துவங்களைக் கடந்துநிற்பவன் என்றல்லவா உண்மை ஞானம் உதிக்கிறது! இதற்காகவே அருச்சனைசெய்கிறோம். தானே செய்யமுடியாமையால் செய்விக்கிறோம்.

அருச்சனைகளில், அஷ்டோத்ரசதநாமம், திரிசதி, சகஸ்ர நாமம், சதசகஸ்ரநாமம் என்று எண்ணிக்கைவகையால் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள், **அஷ்டோத்திரசதம்** என்பது அந்தந்த தேவதைகளுக்கு விருப்பமான–உரிய பத்திரபுஷ்பங் களைக்கொண்டு நூற்றெட்டு பெயர்களைச் சொல்லி அருச்சிப் பது. பார்வதி, வில்வதளங்களால் இந்த அருச்சனையைச் சிவபெருமானைநோக்கிச் செய்து பாதிசரீரத்தைப் பெற்றாள் என்று மகாஸ்காந்தம் சொல்கிறது. தேவி, கணபதி முதலான எல்லா மூர்த்திகளுக்கும் இந்த அருச்சனையைச் செய்தால் எல்லாவிதமானபலன்களையும் அடையலாம் என்று கச்சபுடம் என்றநூல் அறிவிக்கிறது. இதற்கு நைவேத்யம் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு முதலியவைகளே.

திரிசதி அர்ச்சனை :

இது மூன்நூறுபெயர்களைச்சொல்லி அருச்சிக்கப் பெறு வது. இதற்குப் பக்குவம் செய்யப்பெற்ற அன்னமும், பாயசம் முதலியவைகளும் நிவேதித்தல் அவசியம். சிவபெருமானுக்குத் திரிசதியாக விளங்குவது ருத்ரப்பிரச்சனத்தில் மிக நுணுக்க மாக அமைந்திருக்கிறது. நமோஹிரண்யவாஹவே எனத் தொடங்கி நம ஸ்ரீ வத்ஸாய என்று முடிகிறது. இதைச் செய்தால் ஈசுவரனுக்கு ருத்ராபிஷேகம் செய்த பலன் உண்டாகும். தேவிக்கும் திரிசதி உண்டு. லலிதா திரிசதி என வழங்குகின்றது. இது தேவியால் ஹயக்ரீவருக்கும், ஹயக்ரீவரால் அகஸ்தியருக்கும் உபதேசிக்கப்பெற்றது. பஞ்ச தசாக்ஷரி மகாமந்திரத்தை முதலெழுத்தாகக்கொண்டது.

சகஸ்ரநாம அர்ச்சனை :

இது ஆயிரத்தெட்டு பெயர்களைச் சொல்லி அருச்சிக்கப் பெறுவது. இதற்கு மகாநைவேத்யம் அவசியம். தேவாரத்தில்

"பேராயிரம் பரவி வானேரேத்தும் பெம்மானே" என்றும், திருவாசகத்தில் "ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்றும் வருவதால் தேவாரகாலத்திலேயே ஆயிரம் பெயர்களைச்சொல்லி அருச்சிப்பது என்பது தெளிவு. திருவீழிமிழலையில் மகாவிஷ்ணு ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி, ஆயிரம் புஷ்பங்களால் பூஜித்துச் சக்ராயுதம் பெற்றார் என்ற வரலாறும் இந்த அர்ச்சனைக்கிரமத்தை அறிவிப்பது. எல்லா மூர்த்திகளுக்கும் சகஸ்ரநாமம் உண்டு.

சதசகஸ்ரநாம அர்ச்சனை :

கடவுளை இடைவிடாதுதியானிப்பவர்கள் புரச்சரணையை மேற்கொள்வது வழக்கம். புரச்சரணை என்பது இத்தனை நாளைக்குள் இந்தமந்திரத்தை இத்தனைதடவை ஜெபிப்பேன் என்று உறுதிசெய்துகொள்வது. அதனால் விரும்பிய பலன் கைகூடும். ஆதலால் இறைவனுடைய ஆயிரம் திருநாமங்களை நூறுதடவை–ஆயிரந்தடவை சொல்லி அருச்சிப்பேன் என்று சங்கல்பம் செய்துகொள்வதுண்டு. இதுவே லக்ஷார்ச்சனை என்று சொல்லப்பெறுவது. மந்திரலோபம் கிரியாலோபங்கள் இன்றி ஒருநாளைக்கு இத்தனை ஆயிரமாக இத்தனைநாளைக்குள் முடித்துவிடுவேன் என்று சங்கல்பம் செய்துகொள்வதுண்டு. ஒரேதினத்தில் செய்துமுடிப்பதும் உண்டு. இதற்கு ஏகதின லக்ஷார்ச்சனை என்றுபெயர்.

பஞ்சமுகார்ச்சனை :

இதுவன்றி அந்தந்த மூர்த்திகளின் தியானங்களுக்குத் தக்கவாறு புரச்சரணைபண்ணிக்கொள்வதும் வழக்கமுண்டு, அவற்றுள் ஒன்று இந்த பஞ்சமுகார்ச்சனை. சதாசிவ மூர்த்திக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம். சத்யோஜாதம் என்ற ஐந்துமுகங்கள் உண்டு என்பது சிவாகமப்பிரசித்தம். ஐந்து முகங்களுக்கும் ஐந்துபேர் இருந்து சகஸ்ரநாமம் செய்வது. இதுவே பஞ்சமுகார்ச்சனை. முறை:– வில்லம், மாவிலிங்கை, வீளா, கிளுவை, நொச்சி

என்ற பஞ்சவில்வங்களைக்கொண்டு ஐந்துபேர் இருந்து சகஸ்ரநாமம் வாசிக்க அருச்சித்தல்வேண்டும். ஐந்து முகங்களுக்கும் தனித்தனியாக நைவேத்யங்களும் அர்க்கியபாத்திய ஆசமனங்களும் தீபாராதனைகளும் செய்தல் வேண்டும். தோத்திரங்கள் ஓதியபிறகு ஒடுக்குமுறையில் ஒருதீபாராதனை செய்து பிரசாதம் வழங்குதல் வேண்டும்.

ஷண்முகார்ச்சனை :

இது முருகனுடைய ஆறு திருமுகங்களுக்கும் தனித் தனியே செய்யப்படுவது. இதற்கு, முருகனுக்கு உவப்பான ஜாதிமுல்லை, முல்லை, சண்பகம், வெண்கடம்பு, செங்கடம்பு, பன்னீர்ப்பூ இவைகளைக்கொண்டு அருச்சித்தல் விசேஷம். இதற்கும் தாமஸான்னம் நீங்கலான ஆறுவகை மகாநைவேத்யங்களும், ஆறுவகையான பழங்களும் நிவேதிப்பது முறை. இது முருகனுக்கு மட்டும் செய்யக்கூடியது. முருகனுடைய ஷடாட்சரத்தை முதலெழுத்தாகக்கொண்டுஅமைந்த சகஸ்ரநாமத்தை உபயோகிப்பது விசேஷம், அது இல்லாத பொழுது ஏனைய சுப்பிரமணிய சகஸ்ரநாமங்களைப் பயன் படுத்தலாம். இந்தப் பஞ்சமுகார்ச்சனை, ஷண்முகார்ச்சனைகள் சுவாமிமலை போன்ற தலங்களில் நெடுநாளாக நடைபெற்று வருகின்றன.

அஷ்டமூர்த்தி அர்ச்சனை :

இது தக்ஷிணமூர்த்திக்குரியது. இறைவன் மண், புனல், அனல், கால், சூரியன், சந்திரன், ஆகாயம், இயமானன் என்ற அஷ்டமூர்த்தி வடிவாய் இருப்பதால், அவை எட்டையும் இயக்கும் குருமூர்த்திக்கு எட்டுப்பேர் இருந்து முற்கூறிய முறைப்படி செய்வது சிறந்தது. இதற்குத் தக்ஷிணமூர்த்தி சகஸ்ரநாமத்தைப் பயன்படுத்தவேண்டும். நிவேதனமுதலியன முற்கூறிய முறைப்படி, தனித்தனியாக அமைத்தல் இன்றி யமையாதது.

நவசக்தி அர்ச்சனை :

தேவியின் பீட சக்திகளான வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதநீ, சர்வ பூததமநீ என்ற எட்டு சக்திகளுடன் கூடிய மனோன்மணியால் ஸமகாலத்தில் செய்யப்பெற்ற ஒன்பது சஹஸ்ரநாமார்ச் சனைக்கு நவசக்தி அர்ச்சனை எனப்பெயர்.

சிவபெருமானுக்குப்பஞ்சாக்ஷரம் போலவும், முருகனுக்கு ஷடாக்ஷரம் போலவும், அம்பிகைக்கு நவாக்ஷர மந்திரம் நவாவரணபூஜை முதலியவைகள் மிகவும் சிறப்பாக விளங்கு கிறது. பல இடங்களில் அம்பிகைக்கு ஒன்பது என்ற சங்கியை மிகச் சிறந்ததாகக் காணப்படுவதால் சமகாலத்தில் ஒன்பது ஸகஸ்ரநாமம் செய்வது விசேஷ பலனைக் கொடுக்கக் கூடியதாகும்.

தனித்தனி பன்னீரைத் தெளித்து வாசனையுள்ள எட்டு வகையான புஷ்பங்கள், சுத்தமாகத் தயார்செய்யப்பட்ட மஞ்சள் குங்குமம் ஆகிய இவைகளைக்கொண்டு பரிசுத்தமான ஒன்பது ஆசாரியர்கள் தேவி கர்ப்பக் கிருஹத்தில் தேவியைச் சுற்றி நின்றுகொண்டு, தேவியின் நாமானுஸ்மரணத்துடன் அர்ச்சிக்கவேண்டும். ஒன்பது அறிஞர்களைக்கொண்டு லலிதா ஸஹஸ்ரநாமத்தை ஒரே சுருதியில் தேவி தியான புரஸ்ஸர மாகப் படிக்கச்செய்ய வேண்டும். முடிவில் பக்குவமாயும் ருசியாயுமுள்ள ஒன்பதுவகை நிவேதனத்துடன் பாயசம், வடை, தேங்காய், மலைப்பழம் முதலிய ருசியான பழங்களை யும் நிவேதிக்கவேண்டும். ஏலக்காய், லவங்கம், குங்குமப்பூ, பச்சக்கற்பூரம், ஜாதிக்காய் சேர்த்துக்கட்டின காளாஞ்சி முதலியவைகளையும் நிவேதனம்செய்து, கற்பூர ஹாரத்தி செய்து பிரசாதம் வழங்கவேண்டும்.

பயன்: ஹயக்ரீவர்.

पायसं भाग्यवृद्धिःस्यात् माषापूपं धनप्रदम् ।
नारिकेलं जयं प्रोक्तं फलं चाऽभीष्टसिद्धिदम् ॥
तांबूलं श्रीकरंप्रोक्तं कर्पूरज्योतिदर्शनम् ।
ज्योतिर्मयस्वरूपाढ्य पुत्रपौत्रविवर्धनम् ॥

"பாயசத்தினுல் பாக்கியவிருத்தியும், வடையில் தனவிருத்தியும், தேங்காயினுல் ஜயமும், பழத்தினுல் இஷ்டசித்தியும், தாம்பூலத்தினுல் சோபையும், கர்ப்பூர தரிசனத்தினுல் தேஜோவான்களான புத்திர பௌத்திராபிவிருத்தியும் உண்டாகும்."

यस्तु नामसहस्रेण शुक्रवारे समर्चयेत् ।
सर्वान्कामानवाप्येह सर्वसौभाग्यसंयुतः ॥
पुत्रपौत्रादि संयुक्तो भुक्त्वा भोगान्यथेप्सितान् ।
अन्ते श्रीललितादेव्याः सायुज्यमतिदुर्लभम् ॥

"எவர்(இவ்வாறு) சுக்கிரவாரத்தில் சஹஸ்ரநாமத்தினுல் மஹாதேவியை அர்ச்சிக்கின்றாரோ, அவர் எல்லா விருப்பத்தையும் அடைகின்றார். ஸகல சௌபாக்யத்தையும் அடைகின்றார். புத்திரபௌத்ராதிகளுடன் விரும்பிய போகங்களை அனுபவித்து முடிவில் சாயுஜ்யத்தையும் அடைகிறார்."

ஷோடசார்ச்சனை :

இது மகாகணபதியை எண்ணிச் செய்யப்படுவது. பால கணபதி, தருண கணபதி, பக்த கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவஜகணபதி, பிங்கள கணபதி, உச்சிஷ்ட கணபதி, க்ஷிப்ர கணபதி, ரக்த கணபதி, ஹேரம்ப கணபதி லக்ஷ்மி கணபதி, விஜய கணபதி, புவன கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி என்ற இந்தப்பதினாறு கணபதியையும் பதினாறுபேர் தனித்தனியாக தியானித்துக்கொண்டு கணபதி சகஸ்ரநாமார்ச்சனை செய்யவேண்டும். நைவேத்யம் பக்ஷணம் பழங்கள் பதினாறுவகையாக அமைதல் வேண்டும். துளசி தாழம்பூ நீங்கலான மற்ற பத்திரபுஷ்பங்களில் பதினாறு கொண்டு அருச்சித்தல்வேண்டும். அறுகு அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டும். தீபாராதனையும் பதினாறுபேரிருந்து சமகாலத்தில் செய்தல்வேண்டும். இதில் பதினாறு பிரமசாரிகளைப் பூசிப்பது விசேஷமாக இருக்குமென்று மந்திரசாஸ்திரம் கூறுகிறது.

மதிப்புரை

பழனியாண்டவர் மயில்விடு தூது வசனம்:

இறைபணியே தம்பணியாக்கொண்ட அன்பரும் அறிஞரு மாகிய பழநி திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை B.A., L.T., அவர்கள் வசன நடையில் எழுதியுள்ளார். இவ்வாண்டு கந்த சஷ்டி விழா வெளியீடு. நூலின் மூலகர்த்தா கோவை கு. நடேச கவுண்டர். சுப்பிரமணியன் ஒப்பற்ற பெருமை, பழனிமலையின் பலபெருஞ் சிறப்புக்கள், பவவினை ஒழிக்கும் சிவமலை மாண்பு, குமரன் கோயில் குலவும் சிறப்பு, தேசமர் வேலவன் பூசனை சிறப்பு. முருகப்பெருமான் திருவுலாக்காட்சி, விசாகப்பெருமான் தசாங்கச்சிறப்பு. நீபத்தாரோன் கோபப்பிரசாதம், தொண்டன் தன் துயரைத் தோகைக் குணர்த்தல், பணிபவர்க்கருளல் அணி மயில் இயல்பு முதலிய பல தலைப்புக்களில் இனிய எளிய உரை நடையில் அமைந்துள்ளது இந்நூல். கிரௌன் சைஸ் மூப்பத்திரண்டு பக்கங்கள். விலை அணு ஆறு.

திருமுறைத்திரட்டு:

பல வருடங்களாகக் காஞ்சிபுரம், திரு. க. வே. அருணகிரி முதலியார் அவர்கள் சிவப்பணி ஆற்றிவருவதை அன்பர்கள் பலர் அறிந்து பாராட்டி வருகிறார்கள். திருமுறைப்பாடல்களை மக்கள் விரும்புகின்ற முறையிலெல்லாம் தனித்தனி அச்சிட்டு வழங்குகின்றார்கள். யாத்ரீகர்களுக்கும் வசதியாக ஆலய வழி காட்டி என்றதொரு நூலும் அச்சிட்டு உபகரித்தது அன்பர்கள் நினைவிலிருக்கும். அத்தகைய சிவாலம் கெழுமிய பேரன்பர் இப்பொழுது 15-வது வெளியீடாக மிகக் குறைந்த விலையில் (2 அணு) திருமுறைத் திரட்டினையும் தந்துள்ளார். தேவார அருண்முறைத் திரட்டு, பஞ்சபூதஸ்தலத் தேவாரம், சிவஞான போத சூத்திரங்கள் அவ்வளவும் இதில் சேர்க்கப்பட்டிருக் கின்றன. இறுதியில் எழுதப்பட்டுள்ள மக்கள் ஒழுக்க முறைகள் அனைவரும் படித்தறிந்துகொள்ள வேண்டியன. கிரௌன் சைஸ் 46 பக்கங்கள். வேண்டுவோர் 'கணபதி வாசக சாலை, 92, காமாட்சிகோயில் தெரு' என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

கூட்டுப் பிரார்த்தனைத் திரட்டு:

வாரவழிபாட்டுக் குழுவினர்களுக்கு மிகப் பயன்படும் நூல் இது. அவ்வழிபாட்டு முறையை ஒட்டி, திரட்டப்பட்டுள்ளது. தோத்திரம், பாராயணம். சமயபோதனை, நாமாவளி, மோனத் தியானம், வாழ்த்து இந்த ஆறு பகுதியில் அமைந்திருக்கிறது. திருமுறைக்கு மும்மூன்றுக பன்னிரு திருமுறைகளிலிருந்தும் ரஸ மான பாட்டுக்கள் பொறுக்கி எடுத்து, பாராயணப் பகுதியில் தரப்பட்டுள்ளன. சிவபுராணமும் முன்னர் அணிசெய்கிறது.

விநாயகர் - முருகன் மலர் வணக்கம்:

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கோயில் களில் தமிழிலேயே அர்ச்சனை செய்து ஆனந்தம் பெற வழி காட்டியபடியே, ஆனைமுகனுக்கும், ஆறுமுகனுக்கும் மலர் வணக்கமாகத் தனித்தனி நூற்றெட்டு அர்ச்சனைச் சொற் றொடர்கள் இதில் தரப்பட்டுள்ளன, சிவநேசச்செல்வர் வெ. பெ. லெ. லெட்சுமணன் செட்டியார் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா வெளியீடு இது.

இந்த இரண்டு நூல்களையும் புதுவயல் திருவருட்கழகச் சார்பில் ஷை கழகச் செயலாளர் அரு. உ. வீர. அழகப்ப செட்டி யார் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அனைவரும் பெற்றுப் பாராயணஞ்செய்து, அருச்சித்து, வழிபட்டுத் திரு வருளைப் பெற்று உய்வார்களாக.

இராமகாதை:

கம்பர் கவிதைக்கோவை தந்த ஆசிரியர் திரு. அ. சே. சுந்தர ராசன் B. A., அவர்கள் (இலங்கை இராமநாதன் கல்லூரி) இந்த அரிய நூலையும் உலகிற்கு உபகரித்திருக்கின்றார்கள். கோசலநாட்டு அயோத்திமாநகரச் சிறப்பிலிருந்து தொடங்கி, இராமபிரான் முடிபுனைதல் வரை இதில் அடங்கி உள்ளது. மிகமிகப் பெரிய கதையினை மிகச்சுருங்கிய அளவில் எளிய இனிய இன்தமிழ் நடையில் கதைத்தொடர்பு விடாதபடி 45

தலைப்புக்களில் உரைநடையாக எழுதியிருப்பது மிகமிகப் பாராட்டத்தக்கது. இடை இடையே பேச்சுக்களாக வரும் சந்தர்ப்பங்களில் இராமாயணப் பாடல்களே தரப்பட்டுள்ளன. கம்பராமாயணக் கடலில் புகுந்து விளையாட விரும்பும் மாணவர்கட்கு இது ஓர் வழிகாட்டி. கல்லூரி உயர்வகுப்புப் பாடத் திட்டத்திற்கு ஏற்றபடி எழுதப்பெற்றுள்ளது. இவ்வுரை நடை நூல் பதிப்பழகாலும் சிறந்து விளங்குகிறது. இலங்கை தபால்தகவல் மந்திரி கனம் சு. நடேசபிள்ளை B.A.B.L. F.R.E.S. அவர்களது முன்னுரையும் நூலுக்கு அணிசெய்கின்றது. பதிப்பாளர் 'ஜெனரல் புக் கம்பெனி' கும்பகோணம். கிரௌன் சைஸ் 145 பக்கங்கள். விலை ரூபாய் ஒன்றுதான்.

தெய்வநெறிக்கழக வெளியீடுகள். எண், 34, 35, 36.

தேசமெங்கும் தெய்வமணங் கமழவேண்டும் என்பதுதான் இவ்வெளியீடுகளின் நோக்கம். தங்நலங்கருதாது தளரா முயற்சியோடு இப்பணியில் பலநாளாக ஈடுபட்டு அல்லும் பகலும் உழைத்துவரும், சென்னை சிவநேசச் செல்வர் திரு C, S. தாமோதரமுதலியார் அவர்களை, ஒவ்வொரு தமிழன் உள்ளமும் எண்ணுதிருக்க முடியாது. வாய் வாழ்த்திக்கொண்டேதானிருக்கும். பெரிய பெரிய நூல்களைக் காட்டிலும் சிறு சிறு துண்டுப் பிரசுரங்கள்தாம் மிக இலேசாக எங்கும் சென்று பரவும்; எல்லோர்க்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வெளியீடுகளைப் பல்லாயிரக்கணக்காக அச்சிட்டு வழங்குகிறார்கள். அந்த வரிசையில் இம்மூன்றும் இப்பொழுது வெளிவந்துள்ளன. முறையே திருத்தொண்டத்தொகை, மங்கையர்க்கரசியைப் பற்றிய மதுரைத் திருப்பதிகம், கந்தசஷ்டி விரத வரலாறு ஆகியவை காணப்படுகின்றன. இதுவரையில் இக்கழகச்சார்பில் 100000 பிரதிகள் வெளிவந்துள்ளன. அழகிய கலர் காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிடப்பெற்றிருப்பது வாசிப்போர்க்கு ஆனந்தம் அளிக்கிறது. இத்தகைய பணியைப் பாராட்டி ஊக்கமளிப்பதும், ஆதரவு தருவதும் நாட்டுமக்களின் முக்கிய கடமை.

———

ஆதீனத்தின் இம்மாத நிகழ்ச்சிகள்

சமயப்பிரசாரம் :

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் பிரசாரசபா மண்டபத்தில் திருக்கார்த்திகையை முன்னிட்டு 20—11—53 வெள்ளிக்கிழமை மாலை 6½ மணிக்கு அண்ணுமலைப்பல்கலைக் கழக ஓரியண்டல் தமிழ்ப்பகுதித் தலைமைப் பேராசிரியர் பண்டித வித்துவான், திரு. L. P. Kr. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'செவ்வேள்' என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் சோமவாரத்தை முன்னிட்டு 16—11—53 திங்கள் மாலை திருவாரூர் இராஜன் கட்டளை கட்டளை விசாரணை **ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் **சைவத்தின் மாண்பு** என்பதுபற்றியும் 30-11-53 திங்கள் மாலை குடந்தை சிவசேனுபதி, சித்தாந்தப் புரவலர், திரு. P, T. S, **குமாரசாமிச் செட்டியார்** அவர்கள் **திருநீலகண்டர் வரலாற்று நலன்** என்பது பற்றியும் பிரசங்கம் செய்தார்கள்.

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகை ஞாயிறு விசேஷத்தை முன்னிட்டு 22—11—53ல் ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. **முத்து. சு. மாணிக்க வாசக முதலியார்** அவர்கள் தலைமையில் ஆதீனக் கல்லூரி மாணவர்கள் S. M. சுந்தரராஜன், P. பக்கிரிசாமி, P. தங்கராசு. G. பாண்டுரங்கன் ஆகியோர் பிரசங்கம் செய்தார்கள். ஆதீனப் பாடசாலை மாணவர்கள் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினர்கள்.

அன்று ஸ்ரீவாஞ்சியம் தேவஸ்தானத்திலும் கல்லூரிதுணைத் தலைவர் வித்துவான், திரு. **ச. தண்டபாணி தேசிகர்** அவர்கள் தலைமையில் ஆதீனப்பிரசாரம் நடைபெற்றது. ஆதீனக்கல்லூரி மாணவர்களாகிய N. சித்தையன், M. சிவசம்பு ஆகியோர் சமயப் பிரசங்கம் செய்தார்கள். பேரளம் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. **M. பக்தவத்ஸல முதலியார்** அவர்களும் இப்பணியில் கலந்துகொண்டு பிரசங்கம் செய்தார்கள். இசையோடு திருமுறைப் பாராயணமும் நடைபெற்றது.

18–11–53 ஐயம்பேட்டை குடமுருட்டி பாலம் ஸ்ரீ விசுவ நாத சுவாமி கோயில் கும்பாபிஷேகத்தன்று தருமபுர ஆதீனத் தின் சார்பில் திருக்கருகாவூர் சிவத்தொண்டர் திரு. மருணீக்கி யார் அவர்கள் சமயத்தின் சிறப்பு என்பதுபற்றியும், மறுநாள் ஒரு நம்பி அப்பூதி என்பதுபற்றியும் பிரசங்கம் நிகழ்த்தினர்கள்.

6—12—53 காலை 10—12½ மணிக்குத் தஞ்சை ஜூனியர் சர்ட்டிபைட் ஸ்கூலில் நடைபெற்றது. ஆதீனப் புலவர், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் தலைமையில், ஆதீனப் பிரசார கோஷ்டியும், ஆதீனத் தொண்டர் திரு. மருணீக்கி யாரும் சென்று ஷை ஸ்கூலில், அங்குள்ள பெரிய டாக்டர் அவர்கள் தலைமையில் நீதிபோதம் முதலிய அரும்பொருள்களைச் சிறுவர்கள் மனங்கொள்ளச் சொற்பொழிவாற்றினர்கள். திரு. முதலியார் அவர்கள், வித்வான், சொ. சிங்காரவேலன், திரு. மருணீக்கியர், வித்வான், வை. திருஞானசம்பந்தன் ஆகியோர் அந்த இளைஞர்கள் முன்னேற்றத்திற்குரிய நல்வழிகளை வற்புறுத்தி மகிழ்வித்தார்கள். துணைத் தலைமையாசிரியர் ஸ்ரீ சுப்ரமண்ய ஐயர் அவர்கள் நன்றி கூறியபோது தமது அளவிலாத மகிழ்ச்சியை மனமார வாயாரத் தெரிவித்தார்கள். அங்குள்ள மற்றைய உத்யோகஸ்தர் பலர், பிரசாரக் கூட்டத் தாரிடத்தில் கொண்டுள்ள மெய்யன்பைப் புலப்படுத்தினர்கள். மாணாக்கர் பலரும் நல்லமுறையில் பலபல கலைத்திறத்தில் பயிற்சியடைவதும் சமயச்சார்பில் பெரிய பற்றை வளர்த்துக் கொள்வதும் பிரசாரகர்களுக்கு மிக்க வியப்புண்டாக்கின.

7—12—53 மாலை 4½ மணிக்குச் சுவாமிமலை மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயத்தில் பிரசாரம் நடைபெற்றது. கூட்டம் நடைபெற தேவஸ்தான டிரஸ்டி திரு. அப்புராயர் அவர்கள் செய்த உதவிகள் பாராட்டத்தக்கன. திருவாரூர் இராஜன் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்கினர்கள். ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் அருணகிரியார்பாடலொன்றை அழகுறவிளக்கினர்கள். பின்னே 'முருகன் பெருமை'பற்றி வித்துவான், சொ. சிங்காரவேலன் பேசினர். கல்லூரி மாணவர்கள் ஏகாம்பரம், தெய்வசிகாமணி வழி மொழிந்தார்கள். பாடசாலை மாணவர்கள் தேவாரம்

பாடினர்கள். தொடக்கத்தில் ஆதீனத்தின் சங்கீதபூஷணம், திரு. P. சாமிநாதன் இன்னிசை கூட்டத்தை மகிழ்வித்தது.

அன்று இரவு 8 மணிக்குக் கும்பகோணம் ஸ்ரீ சோமேசர் ஆலயத்தில் பிரசாரம் நடந்தது. திரளான சிவனடியார் கூடியிருந்தனர். குடந்தை அன்பர் சிவசேனுபதி திரு. P. T. S. குமாரசாமிச் செட்டியாரவர்கள் யாவரையும் வரவேற்றார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமை வகித்தார்கள். புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் ஒரு தேவாரப்பாடலை விளக்கும் வாயிலாக, சைவ சித்தாந்த சாத்திர நுட்பங்களைத் தெளிவுறப் பேசினர்கள். பின் வித்துவான் சொ. சிங்காரவேலன் 'தோத்திர இசை' பற்றிப் பேசினர். திரு செட்டியாரவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் கூட்டம் இனிது முடிந்தது.

பாவநாசம் கழக உயர்நிலைப்பள்ளியிலும் ஆதீனப் பிரசாரம் நன்கு நடைபெற்றது. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பிரசாரகர்களை வரவேற்று உபசரித்தனர். மாலை 4-மணிக்குக் கூட்டம் தொடங்கப்பெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் திரு. முத்துக்குமர மூப்பனர் அவர்கள் தலைமை வகித்துப் பேசினர். தமிழாசிரியர் வித்துவான், திரு. அரங்கநாத ஐயங்கார் அவர்கள் பிரசாரகர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். பின் ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர் வித்வான், ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், மாணவர்களுக்குத் தெய்வ வழிபாடு வேண்டும் அதற்கு ஏற்ற ஒரேவழி உருவேற்றுதல் என்பனபோன்ற கருத்துக்களில் பேசினர்கள். பின் வித்துவான், வி. சா. குருசாமி கடவுள் நம்பிக்கையால் கலைவளரும் என்று பேசினர். ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்கள் கடவுள் வாழ்த்துப்பாடக் கூட்டம் முடிவுற்றது.

அன்று மாலை 7-மணிக்குத் திருநாகேஸ்வரம் கோயிலில் ஆதீனப் பிரசாரத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தது. வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் சுந்தரருடைய வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கிப் பேசினர்கள். வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் ஞானசம்பந்தத்தின் வரலாற்றுக்கு விளக்கம் தந்து பேசினர். திருக்கருகாவூர் தொண்டர் ஸ்ரீ மருணீக்கியார் அப்பரடிகளின் சரித்திரத்தைப்

பற்றிப் பேசினர். ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்கள் திருமுறை ஓதினர்கள்.

ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி பிரதிஷ்டை :

ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 30—11—53 சோமவாரத்தன்று ஷை ஆலய கருப்பக்கிருஹத்தின் தென்பக்கத்தில் **ஸ்ரீ தெக்ஷிணமூர்த்தி பிரதிஷ்டை** மிகச்சிறப்பாகச் செய்விக்கப்பெற்றது. அன்பர்கள் தரிசித்து அருள்பெற்றுய்ந்தனர்.

ஏகதின லக்ஷார்ச்சனை :

26—11—53 தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி ஆலயத்தில் **ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும், ஸ்ரீ ஞானம்பிகைக்கும்** ஏகதின லக்ஷார்ச்சனை வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்தார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் பலர் ஷை கல்லூரிப் பேராசிரியர் புலவர், திரு. **முத்து. சு. மாணிக்கவாசக** முதலியார் அவர்கள் தலைமையில் அருமையான சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினர்கள். வேத பாராயணமும் நடைபெற்றது. இரவு மகாபிஷேகம் நடைபெற்ற பிறகு அம்பாளுக்குச் சந்தனக்காப்பு அலங்காரம் செய்வித்து விசேஷ ஆராதனையும் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியாகி வழிபாடாற்றி அனைவர்க்கும் அருட்பிரஸாதம் வழங்கினர்கள். வெளியூர் அன்பர்களும் பெருந்திரளாக வந்து வழிபட்டுய்ந்தனர்.

மாயூரம் கடைமுழுக்கு :

15—11—53ல் தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டியினர் வழக்கம்போல் இந்த ஆண்டும் கடைமுழுக்கன்று பிரசாரப் பணியில் ஈடுபட்டார்கள். காவிரி இடபதீர்த்தத்தின் இருகரையிலும் இரண்டு பிரசார வாகனங்களும் காலையிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. அன்பர்கள் கூட்டம் அன்று எப்பொழுமே அதிகமாக இருக்கும். ஆதலால் ஒலிபெருக்கிகளை எங்கும் அமைத்து வாகனத்தில் இருந்தபடியே சமயப்பிரசாரம் நடைபெற்றது.

ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் சமயத்தின் சிறப்பினையும் சமயச் சின்னங்களின் பெருமைகளையும் எல்லோருக்கும் புரியுமாறு எடுத்துரைத்தார்கள். அற்புதத் தேவாரங்கள் ஓதப்பெற்றன. கீதஒலி அனைவரையும் சிவசிந்தனையில் ஆழ்த்தியது. இடை இடையே மக்கள் பாதுகாப்புக்கு வேண்டிய எச்சரிக்கைகளும் சொல்லப்பெற்றன. ஆதீனக் கல்லூரி ஸ்கௌட் மாணவர்களும் தக்க முறையில் தொண்டாற்றினர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் நன்கு அலங்கரிக்கப்பெற்ற சிவிகையில் பட்டினப்பிரவேசமாக ஆதீன மடாலயத்திலிருந்தே அடியார்களும் அன்பர்களும் உடன்வர மங்களவாத்திய முழக்கத்துடன் எழுந்தருளியானர்கள். பெருமான் இடபாரூடராய் எழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருளினர். மாயூர நகரத்தில் கோயில்கள் பல இருப்பதால் அங்கங்கிருந்த பஞ்சமூர்த்திகளும் தனித்தனியே காவிரிக்கரைக்கு எழுந்தருளியாகித் தீர்த்தங்கொடுத்தருளிய காட்சி கண்டு களித்தற்குரியது. சிறுவர்களும் சிறுமிகளும் அன்றுடம் செய்யவேண்டிய கட்டளைகள் அச்சிடப்பெற்ற துண்டுப் பிரசுரமும், மாயூரம் கடைமுகச் சிறப்பு என்ற வெளியீடும் எல்லோர்க்கும் வழங்கப்பெற்றன.

ஏழைகளுக்கு அன்னம் :

வழக்கம்போல் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கந்தசஷ்டி ஆறுநாளும் உபவாசமிருந்து, ஒவ்வொரு நாளும் சுப்பிரமணிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றி, வேளூர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமியையும் இடைவிடாது தரிசனம் செய்தருளி பாரணை முடித்தார்கள். 13-11-53 அன்று மாகேசுவர பூஜையும் நடைபெற்றது. சுமார் இரண்டாயிரம் ஏழைகளுக்கு, ஆதீன மடாலய முகப்பில் பந்தி பந்தியாக அன்னம் வழங்கப்பெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நேரிலே இருந்து அமுதளித்து அகமகிழ்ந்தார்கள். இதைத்தானே 'ஈத்து உவக்கும் இன்பம்' என்கிறார் வள்ளுவர்.

ஷோடசார்ச்சனை :

4—12—53 வெள்ளிக்கிழமை மாலையன்று தருமபுர ஆதீனம் திருவீதி தென்மேற்றிசையில் எழுந்தருளியிருந்து வருவோர்

அனைவர்க்கும் வரையாது அருள் வழங்கிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீ சித்திவிநாயகப் பொருமானுக்கு ஷோடசார்ச்சனை மிகச் சிறப்பாக நடைபெற்றது. பதினறுபேர் விநாயக சகஸ்ரநாமம் வாசிக்க பதினறுபேர் அறுகு, வில்வம், மலர்கள் ஆகியவைகளைக் கொண்டு அருச்சித்தார்கள். கற்பூர ஆராதனை நிவேதனம் எல்லாம் தனித்தனி பதினறு. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் ஆராதனையின்போது எழுந்தருளிவழிபாடாற்றினர் கள். நிவேதனம் நூற்றுக்கணக்கான ஏழைக்குழந்தைகளுக்கும் ஏனையோர்க்கும் வழங்கப் பெற்றது.

கார்த்திகை ஞாயிறு விழா:

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத் திலும், கருங்குயில் நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திலும்ஞாயிறுதோறும்பெருமான் காவிரிதீர்த்தங் கொடுத்தருளுகின்றார். ஏராளமான மக்கள் கூட்டம் கூட்ட மாகவந்து தீர்த்தமாடி வழிபட்டுச் செல்கின்றார்கள். கார்த்திகை கடைசிஞாயிறு மிகவிசேஷமாக இருக்கும். அன்பர்கள் தீர்த்தம் ஆடி வழிபட்டு உய்வார்களாக.

திருக்கடவூர் சோமவாரம்:

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத் தில் கார்த்திகை சோமவார நாட்களின் வழக்கம்போல் இம்மாத சோமவாரங்களில் சங்காபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இரவு பஞ்சமூர்த்தி திருவீதியுலாக் காட்சி, சங்கா பிஷேக காலத்தில் கண்டு தரிசிப்பதும், அபிஷேக நீரை அன்போடு வாங்கி உட்கொள்வதும் பெரும் பாக்கியம். ஆதலின் அன்பர்கள் சோமவாரங்கள் தோறும் கூட்டம் கூட்டமாக வந்து வழிபட்டுச் செல்கின்றார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் சோமவார நாட்களில் காலையிலும், மாலையும் எழுந்தருளியாகி வழிபாடாற்றி வருவதோடு இந்த ஒவ்வொரு சோமவாரத்திலும் ஸ்ரீ அமிர்தகடேசப் பெருமானுக்கும், ஸ்ரீ அபிராமி அம்மைக்கும் வலபுரிச்சங்கத்தால் பன்னீர் முதலிய வைகளைக்கொண்டு மகாபிஷேகம் நடத்திவருகிறார்கள்.

சென்னை

தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில் கந்தர்சஷ்டி சொற்பொழிவுகள்

7—11—53. கந்தர்சஷ்டித் திருவிழாவை முன்னிட்டுத் தொடங்கப்பெற்ற பேரவைக்கு, முதல் நாள் தலைமை வகித்தவர்கள், சென்னை ஆரோக்கிய ஆசிரமத்தின் தலைவர் **ஸ்ரீ வெங்கடேசானந்தா** அவர்கள். தலைவரவர்கள் குறிப்பிட்டதாவது:— அறிவு உயர்வடையும், அறியாமை தாழ்வடையும். இதனைச் சேவலும் மயிலும் அறிவுறுத்துகின்றன. அறிவு ஒளிமயம், அறியாமை இருள்மயம். சேவல், நிறத்தாலும் வெள்ளி உதயமாகும் பிரம முகூர்த்தத்தில் ஆரவாரஞ்செய்து அனைவரையும் எழுப்பும் செயலாலும், அறிவைப்போல் முருகன் கொடியாக உயர்வு பெறுகிறது. இருள்மயமாகிய மேகத்தைக் கண்டு ஆர்ப்பரிக்கும் மயில் நிறத்தாலும், செயலாலும் அறியாமையை விளக்கி, அடிகளில் தாழ்வுற்றிருக்கிறது என உரைத்தார்கள். "கந்தர் கலிவெண்பா" என்பது பற்றிப் பேசிய வித்துவான் திரு. **D. கண்ணப்ப முதலியாரவர்கள்** கந்தர் கலிவெண்பாவில் கந்தபுராணக் கருத்துக்களைச் சுருக்கி முழுமையும் அமைத்துள்ளார் குமரகுருபரர் எனவும், முருகன் தோற்றத்தையும், சிறப்பியல்புகளையும் மூன்றுவித உயிர்சட்கு அப்பிரான் அருள்புரியும் அழகினையும் இந்நூல் எடுத்துரைக்கிறது எனவும், இதனைப் பாராயணம் செய்வார் பழுத்த தமிழ்ப் புலமையுடன் ஒழுக்கமும், சிவப்பேறும் சித்திக்கப்பெறுவர் எனவும் எடுத்துரைத்தார்கள்.

8—11—53 இரண்டாம் நாள் விழாவிற்குத் திருப்புகழ் மணி **திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர்** அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் பேசுகையில், முருகனது ஆறு முகங்களும், பன்னிரண்டு கைகளும் அறிவிக்கும் தத்துவக் கருத்துக்களை "ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே" என்ற திருப்புகழைக் கொண்டு விளக்கினர்கள். மேலும் அறியாமையை அகற்றி அறிவையும் அன்பையும் வளர்த்து உயிர்களை வாழவைப்பதே சமயநெறி எனவும், பிறப்பால் ஒருவன் உயர்வெய்த

முடியாது ஒழுக்க முதலிய சிறப்பால் உயர்வடைய முடியும் என்பதை நமது சமயம் காட்டுகிறது எனவும் கூறினர்கள். திருப்புகழ் என்பதுபற்றி **ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்** பேசுகையில் என்றும் இளமையாக, அழகியதாக, இன்பமயமாக அழியாததாக இருக்கின்ற முருகனுகிய திருவைப்பற்றிய புகழ்ப் பாடல்களே திருப்புகழ் என்றும், அத்திருப்புகழ்களில் அருண கிரி நாதர் தமது வாழ்க்கை அநுபவத்தை அமைத்து இருட்குழி யில் வீழாமல் எடுத்து ஆண்ட முருகனேப்புகழ்கின்றார் என்றும், அறுவகைக் குற்றங்களையும் அகற்றினேர் இன்ப இறையை எய்தமுடியும் என்பதை சஷ்டிவிழா அறிவிக்கிறது என்றும் கூறினர்கள்.

9—11—53 மூன்றும்நாள் விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னை சட்டசபைத்தலைவர் **ஜெ. சிவசண்முகம் பிள்ளையவர்கள்** முருகன், கலியுகவரதன், கண்கண்டதெய்வம், வேண்டினர்க்கு வேண்டுவன கொடுப்பவன் என்பதைத் திருமுருகாற்றுப்படை யால் நன்கு உணரலாம், முருகபத்தராகிய நக்கீரர் தமக்கும் மற்றையோர்க்கும் வந்த இடையூற்றினை அகற்றவே இத் திரு முருகாற்றுப்படை நூலைப் பாடினர். இதுபோன்ற விழாக் களையும், தத்துவக்கருத்துக்களையும் பேட்டைகள் தோறும் சென்று மக்கட்கு அறிவுறுத்தவேண்டும். அப்பணியைத் தருமபுர ஆதீனம் செய்துவருவதைப் பாராட்டுகிறேன் என உரைத்தார். **திரு. வேணுகோபால் செட்டியார் அவர்கள்** திருமுருகாற்றுப்படை எழுந்த வரலாற்றை மிகவிளக்கமாகப் பேசினர்கள். **திரு. மு. இராசாக்கண்ணனர் அவர்கள்** திரு முருகாற்றுப்படையின் அமைப்புமுறைபற்றி அறிவித்தார்கள். தொடக்கத்தில் ஒளியையும், அடுத்து முருகனின் உருவ அமைப்பையும், அடுத்து திருவடியின் சிறப்பையும் அருள் வழங்கும் பெருமையையும் "வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி மலர்க்கழல்கள் அவைகாட்டி" என்ற திருவாசக அடி யுடன் இணைத்துக்காட்டிப்பேசினர்கள்.

10–11–53 நான்காம் நாள்விழா **திரு. K. விநாயகம் M.L.A. அவர்கள்** தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள், தமிழர் களுடைய பண்பாட்டின் உயர்வினை விளக்கும் கடவுள் முருகனே என்றும், அத்தகைய முருகப்பெருமான் எழுந்தருளி யுள்ள திருத்தணி தமிழ்நாட்டைச் சேரவேண்டுவதே முறை

என்றும் கூறினர்கள்: "பிள்ளைத்தமிழ்" என்பதுபற்றி, திரு. P. R. மீனாட்சி சுந்தரம் M A. அவர்கள் பேசுகையில் பிள்ளைத் தமிழிலக்கணத்தை விளக்கியதுடன், ஸ்ரீ முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழின் மேன்மையைப் பாராட்டினர்கள். 'மழவு முதிர்' என்ற வருகைப் பருவப் பாடலைக் கூறி விளையாட்டயரும் முருகனின் செயலில் காணப்பெறும் அருங்கருத்துக்களைச் சிறப்பித்துப் பேசினர்கள்.

11—11—53 ஐந்தாம்நாள் விழாவிற்குப் பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதாரப் பேராசிரியர் திரு, A. முத்தையா M. A., அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர்கள். முருகன் வழிபாடு மிகத் தொன்மைவாய்ந்தது. சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பேசப்பெறும் பெருமைவாய்ந்தது. அத்தகைய வழிபாட்டினுக்குரிய முருகனை அருணகிரிநாதர் அருந் தமிழ்ப் பாடல்களால் அலங்கரித்துள்ளார். அந்நூலை "கந்தர் அலங்காரம்" என அறிவித்தார்கள். 'கந்தரலங்காரம்' என்ற பொருள்பற்றி வித்துவான், திரு. B. சொக்கலிங்கம் ('சௌபாக்கியம்' ஆசிரியர்) அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் அருணகிரிநாதர் கிளியுருவம் கிடைத்த பிறகு இக் கந்தரலங்காரத்தைப் பாடினரென்றும், இறையருளைப் பெற்றவர்கள் எவ்வுருவத்திலும் வியத்தகு செயல் செய்யமுடியும் என்பதற்கு இவ்வரலாறு ஒருசான்றாகும் என்றும், வள்ளிமணாளனை மெய்யன்பினால் வழிபடுவார்களுக்குப் பேரின்பமிலை கைகூடும் என்றும், அந்த இன்பங்கண்ட ஒருவனுக்கு உலகியல் இன்பங்கள் அனைத்தும் கைத்துவிடும் என்றும், இதுபோன்ற அருங்கருத்துக்களை அலங்கரித்துக் கூறுகிறநூல் இக்கந்தரலங்காரமே என்றும் அறிவித்தார்கள்.

12—11—53 ஆறும்நாள் சஷ்டியன்று திரு. P. T. இராஜன் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்புரை நல்கினர்கள். ஆசை அகலவேண்டும்; அன்பு பெருகவேண்டும்; அவ்வன்பை ஆண்டவனிடத்தில் செலுத்தினால் இன்பத்துடன் வாழமுடியும், நாட்டில் இன்று ஆசைதான் பெருகுகிறது. ஆசை பெருகியதால்தான் துன்பமும் நம்மைச்சூழ்கிறது. ஆசைமுதலிய கெட்டகுணங்களை அகற்றவேண்டும் என்பதைச் சஷ்டிவிழா நமக்கு அறிவிக்கிறது எனக் குறித்தார். "கந்தரநுபூதி" என்பதுபற்றி அ. துரையரங்கனர் M. A, அவர்கள் பேசுகையில் பேரின்பப் பொருளாகிய

முருகனை அனுபவிக்கும்முறையினைக் கூறுதலால் இந்நூலினைக் கந்தரநுபூதி என அழைத்தனர்; உலக இன்பத்தை அநுபவிக்க ஒருசில சட்டதிட்டங்கள் இருப்பதுபோல கந்தனை அனுபவிக்கவும் சட்டதிட்டங்கள் உண்டு; அதனை இந்நூல் விளக்கமாக எடுத்துரைக்கிறது; பேராசை அகற்றி ஐம்புலனும் அகத் தடக்கிச் சும்மாயிருத்தலே சுகம்பெறவழியென்பதைச் சிறப்பாக இந்நூலில் காணலாம் என உரைத்தார்கள். கூட்டத்தின் முதலிலும் முடிவிலும் திருமுறையாசிரியர் சங்கீதபூஷணம் திரு. P. சாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினர்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி நவின்றார்கள்.

வை நிலையத்தில் ஞாயிறுதோறும் பெரியபுராணச்சொற்பொழிவுகள்

22—11—53 ஞாயிற்றுக்கிழமை மாலை *6-30* மணிமுதல் பெரியபுராணத்தில் **பாயிரம்** என்பதுபற்றிக் கயப்பாக்கம் **ஸ்ரீ சோமசுந்தரஞ் செட்டியார்** அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். பேசுகையில் பெரிய புராணம் பெருங்காப்பியம் எனவும், இக்காப்பியத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலைவராவார் எனவும், இந்நூலைப் பெரியபுராணம் எனவும் திருத்தொண்டர் புராணம் எனவும் சேக்கிழார்செப்புகிறார்எனவும், "ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்ற ராகலின் இந்நூலுக்குப் பாயிரமும் சிறப்பாக அமைத்துப் பாடியுள்ளார் சேக்கிழார் எனவும் கூறினர்கள்.

27—11—53 ஞாயிற்றுக்கிழமை இரவு *6½*மணிக்கு, **திருமலைச் சிறப்பு, நாட்டுச்சிறப்பு** என்பதுபற்றிக் கயப்பாக்கம் **ஸ்ரீ சோமசுந்தரஞ்செட்டியார்** அவர்கள் சொற்பெருக்காற்றினர்கள். இறைவன் சத்தியுடன் எழுந்தருளியிருப்பதே திருக்கயிலைக்குச்சிறப்பு எனவும், கயிலைமலைபோல் தூய்மையும், வாய்மையும், உயர்வும் உள்ள உள்ளத்திலேதான் கடவுள்வீற்றிருப்பாரெனவும், இம் மலைச்சிறப்பின் வாயிலாகத்தான் சுந்தரர்வரலாறு—அடியார்கள் வரலாறு தொடங்கப்பெறுகிறது என்றும் கூறினர். நாட்டுச் சிறப்பை அறிவிக்கும்போது நாடென்பது வளமுடையதாக

அமையவேண்டும், நாட்டில் வாழ்பவர்கள் கடவுள்நம்பிக்கை உடையவர்களாக—தூயஉள்ளம் படைத்தவர்களாக—மகிழ்ச்சி யுடையவர்களாக வாழவேண்டும், அரசன் ஆறில் ஒன்றே பெற்று அரசாட்சி நடத்தவேண்டும். இவையனைத்தும் நாட்டுச் சிறப்பில் எடுத்துக்காட்டப்பெறுகிறது என்று தெரிவித்தார்கள்.

6—12—53 ஞாயிற்றுக்கிழமை இரவு 6-30 மணிக்குத் திருமுருக கிருபானந்தவாரியாரவர்களின் இளவல், ஸ்ரீ திருமா மணுள சிவம் "மநுநீதி ஆட்சி" என்பதுபற்றிப் பேசினார்கள். பேசுங்கால் அரசனுவான் உயிர்களின் கண்ணும், உயிரும்போல் இருக்கவேண்டும்; நீதியுடையனுய் நடுநிலை திறம்பாது ஆட்சி புரியவேண்டும்; தன்னலும் பரிசனத்தாலும், பகைவராலும் கள்வராலும், பிற உயிர்களாலும், தன்னல் காக்கப்படும் உயிர் கட்கு இன்னல் நேராவண்ணம் இனிது காக்கவேண்டும்; மகன் தந்தையிடத்து நடந்துகொள்ள வேண்டிய முறைமையை அரசன் உலகத்தார்க்குக் காட்டவேண்டும்; இவையனைத்தும் மநுநீதி ஆட்சியில் அடங்கியுள்ளன என அறிவித்தார்கள்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுரம், மாயூரம் P. O.

திருவையாற்றில்

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

தேவாரவகுப்பு ஆண்டுவிழா.

(வித்துவான் C. சிங்காரவேலன்.)

அறம் வளரவேண்டும்:

அறந்தான் தமிழ்நாட்டின் மூச்சு. தமிழ்ச் சமுதாயம் அறத்தின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. 'தன்னை ஈன்ற தாயின் பெரும்பசி கண்டாலும் அறமல்லாதவற்றைச் செய்யாதே' என்பதுதான் திருவள்ளுவர் வகுத்த சட்டம். அந்த நல்லறம் வளரவேண்டும். அப்போதுதான் நாட்டில் இன்பம் வளரும்; துன்பம் தளரும். இந்தத் திருநோக்கோடு உலகெலாம் உய்ய – மனித சமுதாயமெல்லாம் இன்பவாழ்வில் எக்களிக்க – நமது முயற்சியெல்லாம் கன்மைபயந்து விளங்க அம்மையார் அறம் வளர்க்கிறார். நல்லறம் வளர்ந்தாற்றான் நாடு தழைக்கும் என்பது உலகெலாம் ஈன்ற அவ்வொப்பிலா அன்னையின் திருவுள்ளம். அதனால் 'அறம்வளர்த்தநாயகி' என்ற திருநாமமும் பெறுகிறார்; ஐயாறப்பரோடு அழகுறக் காட்சியும் தருகிறார். இப்படி அறம்வளர்க்கும் நாயகியும், ஐயாறப்பரும் அன்பினில் விளைந்த ஆரமுதாக வீற்றிருக்கும் திருத்தலம் எது தெரியுமா? ஏன்! திருவையாறு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஐயாறுதான்:

காரைக்காலம்மையார் 'ஐயாறு வாயால் அழை' என்கிறார்கள்; அப்பரடிகளோ 'ஐயாறன் அடித்தலம் சிந்திப்பரியன – சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்கிறார்கள். இதுமட்டுமா? இசைக்கு ஓர் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த தியாகய்யர் வாழ்ந்த பூமி;

அவரது இசைகேட்ட இன்பத்தால் இன்றும் எல்லோரையும் இன்புறுத்து கின்றது. தஞ்சைச் சரபோசிவேந்தரது 'அரசர் கல்லூரி' அணிசெய்கின்ற ஊர். சுருங்கச்சொன்னல் முத் தமிழும் முழங்குகின்ற இடம் ஐயாறுதானே.

எண்ணம் ஈடேறியது :

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு சிறப்பாக நடக்க, எங்கள் தருமபுர ஆதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தமிழும், தமிழிசையும், வடமொழியும் அருள்மணக்கும் ஐயாறே மாநாடு நிகழச் சிறந்த இடம் என்று திருவுள்ளம் கொண்டார்கள். முதலும் முடிவும் இல்லா முழுமுதற்கடவுள் இந்த முடிவுக்கும் அருள் துணைபுரிந்தான்! கருத்து ஈடேறி யது.கார்த்திகைத்திங்கள் 20, 21 (5, 6—12—53) தினங்களில் மாநாடு நடக்க அருளாணை பிறந்தது. இந்த மாநாட்டுடன் **தேவஸ்தானத் தேவார வகுப்பு ஆண்டுவிழா** நடத் தவும் ஏற்பாடு செய்யப்பெற்றது.

சமயாசாரியர்களுக்கு வழிபாடு :

திருநெறிசெல்லும் தீந்தமிழுக்கு வித்திட்டவர்கள் சைவ சமயாசாரியர்கள். அவர்கள் தமிழகத்தில் தோன்றிப் பணி செய்யாவிட்டால் இன்று திருநீறுதான் ஏது? ஆகமம் ஏது? அஞ்செழுத்து விளக்கம் ஏது? ஒன்றும் இல்லை.

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்நற் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங் கே."

ஆகவே, முதலில் 5—12—53 சனிக்கிழமையன்று காலை பத்துமணிக்கெல்லாம் சமயாசாரிய சுவாமிகள் நால்வர்க்கும் விசேஷ அபிஷேகம் தொடங்கி நடைபெற்றது. அறுபத்து மூவர் விக்ரகங்களுக்கும் விசேஷ ஆராதனைகள் நடந்தன. அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஓதுவார்களது உயர்பணி :

ஆண்டவன்பால் காதல்கொண்டு கசிகின்ற உள்ளத்தோடு கண்ணீர் பெருக்கித் திருமுறைகளை ஓதுவார்களது சிவப்பணி மிக உயர்ந்தது. திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு மஞ்சத்தில் எழுந்தருளியாகி இருந்தன. நேரே சிவபெருமான் திருமுறை உருவாய் வந்து அருள் பொழிவதுபோன்று இருந்தது அலங்காரம். அலங்கரிக்கப்பெற்ற திருமுறைப் பெருமான் திருமுன்பு ஓதுவார்கள் நாதவெள்ளத்தைப் பெருக்கினர்கள்.

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"
"நாதவிந்து கலாதி நமோ நம"
"ஏழிசையாய் இசைப்பயனாய்"

என்று கூறிய அருள்வாக்கெல்லாம் படித்தவர் மனத்திலே ஒன்றன்பின் ஒன்றாக ஓடிவந்தது. கேட்டிருந்த எல்லோரும் சிவானந்த வாரிதியிலே தம்மை யறியாது அழுந்தி உய்ந்தனர்.

உச்சிவேளையில்:

மணி ஒன்றரை. நல்ல பசிநேரம். ஐயாறப்பர்கோயில் சந்நிதியின் திருமுன் மண்டபத்திலோ ஒரே நாதவெள்ளம். பல்லாயிரக்கணக்கான பக்த கோடிகள் மெய்ம்மறந்து சிவானந்த அமுதை வாரிவாரி உண்ணுகின்றார்கள். உலகப் பசிக்கு உணவிடவேண்டிய நிலையில் இருந்தும் உயிர்ப்பசிக்கு ஏற்ற உணவை உவகையோடு உண்டு களித்தார்கள். ஐயாறப்பரின் திருவருளுக்கு இலக்காளர்கள், தியாராதனை ஆயிற்று. சமயாச்சாரிய மூர்த்திகளும், அவர்களருளிய அருட்பொக்கிஷங்களும் திருவருட் பெருக்கை வந்திருந்த பக்தகோடிகளை மடுக்கச்செய்து பசியைப் பரந்தோடச் செய்யுமானால் அந்தமாபெரும்நிலைசொல்லுந்தரம் உடையதன்றே! செவியுணவு வயிற்றுணவை மறக்கச்செய்யும் என்பதுதானே வள்ளுவர் கருத்து.

மண்டபத்துக்குப் புறப்பாடு:

முகப்புப் பந்தலுடன் - முடியில் சிவலிங்கத் திருவுருவத்துடன் விளங்கிய பிரசார மண்டபத்துக்குத் திருமுறைகள் கைத்தலச்சேவையாக எழுந்தருளச்செய்து கொண்டுவரப் பட்டது. வழியில் இனிமை ததும்பும் இசைமுழக்கம். தேவார ஓதுவார்கள் தேனெழுகும் குரலில் இசைத்தார்கள்,

தூமறைபாடும் வாயால் சொற்றமிழ் பாடுக என்று இசைமேல் வைத்த விருப்பத்தால் இயம்பியவனன்றே நம் பரமன்! சுந்தரரது இசைமேல் வைத்த ஆர்வத்தால் திருவாரூர் வீதியிலே கால்கடுக்க நடந்த கண்ணுதலானன்றே நம் பரமன்! அத்தகைய ஒரு பெரும் தெய்வ இசையில் ஈடுபட்டுத் திருவருள் விளக்கம் தந்து பெரலிவுற விளங்கினன் போரானை உரிபோர்த்த அப்புனிதன்.

மாலை நேரத்திலே:

மணியும் நாலரை; திரளான கூட்டம்: பிரசங்க மண்டபம் நிறைந்திருந்தது. இடமில்லாமல் மண்டபத்துக்கு வெளியேயும் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது, எல்லோர் செவிகளும் 'எப்போது எங்கட்கு உணவு' எப்போது எங்கட்கு உணவு' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஒலிபெருக்கி, திருமுருறை முழக்க ஒலியை எங்கும்பரப்பி வருவார்போவார்களை ஓரிடத்திலே நிற்கச்செய்துவிட்டது.

ஐந்து மணிக்கெல்லாம் தேவஸ்தான விருந்தினர் விடுதியிலிருந்து தலைவரும், பேச்சாளர்களும் மண்டபத்துக்கு தக்க மரியாதைகளுடன் வரவேற்று அழைத்துவரப் பெற்றனர். நெற்றியில் திருநீற்று விளக்கமும், மெய்யில் சாதனமும் கொண்டு அவர்கள் எழுந்துவந்த இனிய காட்சி, கைலாயத்தினின்று வரும் சிவகணங்களோ என்று வியக்கும்படியாக இருந்தது. அப்பரடிகள் கயிலாயக் காட்சியைத் தெரிசித்த இத் திருத்தலத்தில் இத்தகைய நினைப்பு எழுவதில் வியப்பில்லை அல்லவா?

தொடங்கியது மாநாடு :

தேனென இனிக்கும் திருமுறைப் பாராயணத்துக்குப் பின்னர் கூட்டத்துக்குத் தலைமைவகித்த திருவையாறு அரசர் கல்லூரித்தலைவர் ஸ்ரீ P. திருஞானசம்பந்தம் M. A., அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து முன்னுரையாற்ற முற்பட்டார்கள்; அவர்கள் தம் முன்னுரையிலே தருமை ஆதீனத்துத் தவப் பணிகளைப் பாராட்டியதோடு இதுபோன்ற மாநாடுகள் இன்றைய தமிழ் நாட்டிற்குத் தேவை என்றும் தமிழோடு சைவம் தழைத்தினிதோங்கச் செய்யும் தருமை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் போற்றினர்.

திருமுறை அருட்பொக்கிஷம் :

'ஆன்மாக்கள் ஆண்டவனிடத்தில் முறையீடு செய்யும் நமது முன்னோர்கள் ஆக்கித்தந்த அருட் பொக்கிஷங்களே திருமுறைகள்' என்று முதலில் சம்பந்தர் திருமுறையைப் பற்றிப்பேசிய குடந்தைச்சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சிவசேனாபதி, சைவப் புரவலர் திரு. ப. தி. சோ, குமாரசாமிச் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் 'நன்றுடை யானே' என்ற பாடலின் கருத்தை விளக்கினர்கள்.

வாழ்த்துச் செய்திகள் :

மாநாடு சிறப்புற நிகழவேண்டி வர இயலாத அன்பர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள். 'கண்டறியாதன கண்டேன்' என்று அப்பரடிகளே ஐயாற்றுத் தலத்தை வியப் பார்களானால், காண இயலாத மெய்யன்பர்கள் பரபரப்பது இயற்கைதானே. அவ்வாறு அன்பர்கள் பலர் அனுப்பியிருந்த பல வாழ்த்துச் செய்திகளையும் ஆதீனக் கீழ்திசைப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வாசித்தார்கள்.

பிறந்ததன் பயன் பிரானடி தொழுதலே :

அடுத்து அறநிலையப் பாதுகாப்பு உதவி ஆணையர் திரு. **P. சுப்பிரமணியப்பிள்ளை** அவர்கள் பேசினார்கள்; அவர்கள் பேச்சின் ஒரு பகுதியைக் கேளுங்கள்:

'அன்பர்களே! தருமையாதீனம் செய்துவரும் பணிகள் இந்த நாடறிந்தவை. இவ்வாறு ஆங்காங்கு மாநாடுகள் கூட்டுதல் போற்றத்தக்கது. அவர்கள்வழி நாமெல்லாரும் ஒழுகல் மிக இன்றியமையாதது. அடியேனுக்கு இட்டபணி திருமுறை பயின்ற செல்வச் சிறுமிகளுக்குப் பரிசு வழங்குதலாகும். வள்ளுவர் 'கற்றதனலாயபயன் கடவுளைத் தொழுதலே' என்கிறார். நம்மையெல்லாம் படைத்துக் காக்கும் ஆண்டவனைப் பணியவில்லையேல் படித்தும் பயன் இல்லாதவர்களாவோம். இறைவனை மனம், மொழி, மெய் ஒன்றித் தியானம் செய்யவேண்டும். அவ்வாறு தியானிப்பதற்குத் திருமுறைகள் துணைசெய்கின்றன. அப்படித் தொழாவிட்டால் நாம் பிறந்தும் பயன் இல்லை. ஆகவே, 'பிறந்ததன் பயன் பிரானடி தொழுதலே' என்பதை நாம் நன்குணர வேண்டும்.

ஆளுடைய பிள்ளையாராகிய சம்பந்தரை, "எம்மையாளுடை சிவஞானச் செல்வர்" என்று குறிக்கின்றார் ஓர் பெரியார். அந்தத் தவஞானக் குழந்தையாகிய சம்பந்தர் பாடியன முதல் மூன்று திருமுறைகள். அடுத்த மூன்று திருமுறைகள் அப்பர் சுவாமிகள் பாடியவை. அப்பர் ஐயாற்றிலே கைலைக் காட்சியைக் கண்ட பெரியார். அப்போது அவர் அருளிய பதிகந்தான் 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' என்று தொடங்குகிறது.

இவ்வாறு சிறந்த பெரியோர்கள் பாடிய திருமுறைப் பாக்களை இளமையிலேயே கற்று, தெய்வபக்தியோடு விளங்கும் சிறுவர்களுக்கு எனது பாராட்டு உரியது, அவர்களுக்கு இந்தப் பரிசுகளை வழங்குகிறேன்'

என்று கூறிப் பரிசுகளை வழங்கினார்கள்.

உண்மை ஆசிரியனே உயிர்க்கு வழிகாட்டி:

அடுத்து 'திருநாவுக்கரசர் திருமுறை' பற்றி ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. **ச. தண்டபாணி தேசிகரவர்கள்** அழகொழுகும் தமிழில் பேசினர்கள். அவர்கள் பேச்சின் சாரம் வருமாறு:—

உண்மை ஆசிரியனே உயிர்க்கு உற்ற வழிகாட்டி. எங்கள் ஆதீனத்து முதற்குரவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகளும் சிவபோகசாரத்தில்,

> "தன்னை அறியார் தலைவன் தனை அறியார்
> முன்னை வினையின் முடிவறியார்—பின்னைக்
> குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
> தெருக்கள் தனிலே சிலர்"

என்று கூறியிருக்கிறார்கள். அப்பர் சுவாமிகள் சிவானுபூதிச் செல்வர். அவர்களெல்லாம் நல்ல நெறியைக் கூறினர்கள். தாங்களும் நடந்தார்கள். பிறரையும் நடப்பித்தார்கள். அப்பருக்கு ஆசாரியத்தன்மையிலிருந்து அருளைப்புரிந்தவர்கள் அவர்களது தமக்கையரான திலகவதியார். இஃதேபோல் சம்பந்தருக்கு உமாதேவியே அருள்தீக்கை அளித்தார்கள். அப்பரடிகளுக்குத் 'தாண்டகவேந்து' என்ற பட்டத்தைக் கொடுத்தது ஆறாந் திருமுறை. எனவே அப்பரடிகளுக்குப் பெயரமைத்துக்கொடுத்த பெருந்திருமுறை இத்திருமுறை. அப்பரடிகள் அருளிய, 'மாசில் வீணை' என்ற திருப்பாட்டில் 'இணையடி' என்னுது 'இணையடி நீழலே' என்று கூறியதன் ஆழம் உய்த்துணர்ந்து மகிழத்தக்கது.

நாவலூரர் நட்பு:

இந்தத் தலைப்பில், விழாத்தலைவராக அமைந்த திரு. பெ. திருஞானசம்பந்தம் M. A., அவர்கள் ஓர் இனிய சொற் பொழிவாற்றினர்கள். அவர்களது பேச்சின் சுருக்கம் வருமாறு:—

'நட்பு என்பது மிகஉயர்ந்த தமிழ்ப்பண்பாடு. நட்பிற் பிழை பொறுத்தலே மிக உயர்ந்தது. நாவலூராராகிய சுந்தரர் ஆண்டவனோடு நட்புரிமை கொண்டவர். ஒரு நிகழ்ச்சி.

கோடியக்கரை குழகரைக் காண்கின்றார். தனியாக இருப்பது ஏன்? என்று கேட்கின்றார். 'கடிதாய கடற்காற்று' என்று தொடங்கும் அந்தப்பாடல் குறிப்பிடத் தகுந்த இனிய பாடல்.

நாவலூரரது நட்புரிமையை ஆண்டவன் பெரிதும் விரும்பினர். திருக்கச்சூரில் பசியால் வாடிய சுந்தரர்க்குச் சோறு அளித்தார். திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல், புகலூரிலே பொன், ஆரூரிலே நெல், திருவதிகையில் திருவடி தீக்கை. சேக்கிழார் இந்நிகழ்ச்சிகளை அழகாகப் பாடியிருக்கிறார். சுந்தரர் கோட்புலியார் மக்களைத் தம் மக்களாக ஏற்றுக்கொண்டார். ஏயர்கோன் கலிக்காமரது சிற்றம் தணித்துச் சிறந்த அன்பினர் ஆக்கினர். இவ்வாறு சுந்தரர் ஆண்டவனோடு நட்புரிமை கொண்டிருந்ததுமட்டும் இன்றி, மக்களோடும் நட்புக் கொண்டிருந்தார்.

பண்பு என்பது ஒரு விரிந்த சொல். அதன் பாகு பாடுகளுள் ஒன்று நட்பு என்பது. ஒத்தாரிடையே தோன்று வது நட்பு. சுந்தரர், சேரமான் பெருமாள்நாயனாரோடு சிறந்த நட்புக் கொண்டிருந்தார். சுந்தரரது வருகையைக் கேட்டுச் சேரமான் கொண்ட பெருமகிழ்வைச் சேக்கிழார் அழகாகக் கூறுகிறார். வந்தவுடன் இருவரும் இருந்த இனிய அன்பு நிலையை,

'ஒருவர் ஒருவரோடு கலந்து'

என்று பாடுகிறார் சேக்கிழார். இறைவனை எள்ளி நகை யாடுகின்ற ஒருநிலைக்கும் நாவலூரரது நட்புரிமை வளர்ந் திருந்தது. இறுதியில் இறைவன் கயிலாயத்திலிருந்து வெள்ளானையை அனுப்பிச் சுந்தரரை ஆட்கொள்கின்றார்'.

பண் அமைப்பு திருத்தப்படவேண்டும் :

அடுத்து, 'தேவாரப்பண்ணமைப்பு' என்ற 'தலைப்பில் தஞ்சை சரசுவதிமகால் ஸ்ரீ K. வாசுதேவசாஸ்திரிகள் (B. A.) பேசினர்கள், அவரது பேச்சு ஆராய்ச்சியாளருக்கு ஒரு பெரு விருந்தாக அமைந்திருந்தது. அவரது பேச்சின் ஒருபகுதியை நோக்குங்கள் :

பெரியோர்கள், திருந்துவதற்காகவே இலக்கியங்களை எழுதினர்கள். பௌத்தர் பாலி பாஷையிலும், சைவ வைணவர்கள் தமிழ்மொழியினும் எழுதினர்கள். தோத்திரமே கடவுளை அடைதற்குச் சிறந்தது. மனம் பண்பட இசையோடு சேர்ந்து வழிபடவேண்டும். தேவாரத்திலும் இனிமைமிக்க பண்ணமைப்பொடு கூடியநூல் வேறு எம் மொழியினும் கிடையாது. பண் ஏற்பட்ட 7, 8-ம் நூற்றாண்டுவரை நம் இசையமைப்பில் ஒரு மாறுபாடும் இல்லை. இன்று பண் அமைப்பு பழையமுறையில் இல்லை. இதனைத் திருத்தியமைக்க வேண்டும். சிலப்பதிகாரம் காட்டுகின்ற முறைகள் செழித்தோங்க வேண்டும். பண்களின் இலட்சியம் இலட்சணம் நிச்சயிக்கப்பெறவேண்டும். வடநாட்டிற்செய்த இசையாராய்ச்சியில் அடிப்படைக் குற்றங்கள் உள்ளன. அவற்றை அறிந்து நீக்கிக்கொள்ளுதல் மக்கள் கடமை. மூர்ச்சனை, கிரமம் இரண்டும் அறியப்பட வேண்டும்'

என்றெல்லாம் கூறிச் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில்வரும் பண்ணமைப்புமுறையை விளக்கினர்.

'திருவாசகத் தேன்'

இன்றையதினம் இறுதிப்பேச்சாக அமைந்தது, தஞ்சை மெய்யன்பர் திரு. S. இராமச்சந்திர பத்தர் அவர்களின் இனிய பேச்சு. திரு. பத்தரவர்கள் தமக்கே உரிய ஆற்றொழுக்கான தமிழ் நடையில், திருவாசகத்தைப்பற்றிய நுணுகிய கருத்துக்களைப் பிறநூற் கருத்துக்களோடு ஒப்புநோக்கி அழகாகப் பேசினர்கள். அவர்கள் பேசியதாவது;—

"திருவாசகத்தைத் தேனென்றழைத்தது இரண்டு பாடல்கள். ஒன்று, 'தொல்லை இரும்பிறவீச் சூழும் தளைநீக்கி' என்ற பாடல். மற்றொன்று, சிவப்பிரகாசர் பாடிய 'மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேனே' என்ற அருமைத் திருவாக்கு. திருவாசகம் தேனனது எப்படி என்பதை ஆதீன வெளியீடாக வந்துள்ள அழகிய திருவாசகப் பதிப்பின் நூலாராய்ச்சியில் ஆதீனப்புலவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் விளக்கியுள்ளார்கள். அந்த விளக்கம் பயின்று உணரத்தக்க ஒண்மை உடையது ஆகும்.

கடவுள் உணர்வு தோன்றியது தமிழ் நாட்டில்தான். இலக்கண நூல்களிலே பெயரமைத்திருக்கும் விதங்களைப் பாருங்கள். எழுத்ததிகாரத்தில் மெய், உயிர், உயிர்மெய், சொல்லதிகாரத்தில் திணைபால்கட்குக் கடந்தது கடவுள் என்று கூறப்படுகிறது. பொருளதிகாரத்தில் நான்கு நிலங்கட்கும் கடவுள் வணக்கம் கூறப்படுகிறது; எல்லாச் சொற்களும் காரணப்பெயர்களே ஆனால் சிலவற்றின் காரணம் நமக்குப் புலப்படுவதில்லை. இதைத்தான் தொல்காப்பியர்,

'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று'

என்று கூறினர். இன்றைக்கு நாட்டிலே பண்பாடு அருகி விட்டது. 'மனித உறுப்புடையவரே உள்ளனர்; உள்ளமுடையவர் இல்லை' என்கிறார் வள்ளுவர். ஈழத்து மன்னன் பரராசகேசரி என்பான் பாடிய,

'கருதுசெம்பொனின் அம்பலத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே'

என்ற பாடல் மிக இனியது; இம்மன்னன் உள்ளத்தை ஈர்த்தது, ஸ்ரீரங்கநாதரும், தில்லை நடராசருமாகிய மூர்த்தங்களே யாகும். ஆனால் அந்த மூர்த்தங்களையெல்லாம் இழிவாக நினைத்து, ஸ்ரீரங்கநாதரையும்தில்லைநடராசரையும்' என்றெல்லாம் பாடுகின்ற நிலையில் கடவுளுணர்வு மங்கி வருகிறது. டாக்டர் ஜி.யூ. போப்பின் கருத்தைக் கனிவித்தது திருவாசகம், 'உலகெலாம் அழியும் ஊழிக்காலத்தே தன் தனிமையைக்

சழிப்பதற்கே ஆண்டவன் திருவாசகத்தின் ஓர் பிரதி எழுதிக் கொண்டது'—என்கிறார் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை. அந்தக்காலத்து மக்கள் பொழுதுபோக்காக நூல்களை வாசித் தார்கள் என்று நானூறுவருடங்களுக்கு முந்திய ஓர் புராணம் சொல்கிறது. ஆனால் இப்போதோ பயனற்ற புத்தகங்களே மக்கள் கைகளை அலங்கரிக்கின்றன. பயனற்ற புத்தகங்களைப் படித்து வெறுத்து நம்மாழ்வார்,

"அற்பசாரங்கள் அவை சுவைத்து அகன்று ஒழிந்தேன்"

என்று கூறுகிறார்.

அவ்வாறு வாழுகிறபோது அன்பு நம் குறிக்கோளாக இருக்கவேண்டும். திருவாசகத்தில் அன்பைக் குறிக்கோளாகக் கொண்டு ஞானப்படை வகுக்கும் மணிவாசகப்பெருமான் அழகான பாசுரங்களைப் பாடுகிறார். அத்தகைய திருவாசகம் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டும். தருமையாதீனத் துக் கருணை தாய்க்கருணைபோன்றது. எல்லோர் கையிலும் இருக்குமாறு எழில்நிறைந்த திருவாசகப் பதிப்பை வெளியிட் டிருக்கிறார்கள். அது மக்களால் பெரிதும் போற்றத்தக்கது" என்று கூறிமுடித்தார்கள்.

ஞானக்கண்ணுடி :

இறுதியாகத் தலைவர் அவர்கள் தம் முடிவுரையில் திருவாசகம் ஞானக்கண்ணுடிபோன்றது என்றும் சேவகக் கூத்தன், சுந்தரக்கூத்தன், சம்பந்தக்கூத்தன், மாணிக்கக் கூத்தன் என்ற நால்வரே நம் போற்றுதலுக்குரியவர்கள் என்றும்; உலகியல்வேறு சமயம் வேறு அன்று ஆதலாலேயே "ஏதேது சொன்னலும் ஏதேது செய்தாலும்" என்று குருஞானசம்பந்தப் பெருமான் அருளினார் என்றும் கூறி முடித்தார்கள்.

பின்னர் திருமுறைக்கு ஆராதனை நிகழ்ந்தது. இத்துடன் மாநாட்டு முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

மறுநாள் 6--12--53 அன்று:

மாநாட்டின் இரண்டாம்நாள் நடவடிக்கைகள் சரியாக நான்கு மணிக்கெல்லாம் தொடங்கின. திரளான கூட்டம். ஸ்ரீ தண்டபாணி சுவாமியின் சந்நிதியிலேயே அரசர் கல்லூரி மாணக்கர்களும் அன்பர்களும் செவி உணவு உண்ணச் சித்தமாயிருந்தனர்; கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாயிற்று.

கருவூராரை வழிபடுவோர் கரு ஊரரே:

முதலில் பேசினேர் அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான், திரு. **இராம. கோவிந்தசாமிப் பிள்ளை** அவர்கள். தலைப்பு ஒன்பதாம் திருமுறை. கருவூர்த் தேவர், சேந்தனூர் பாக்களை - பொருளாழத்தின் சீர்மையை விளக்கினர்கள், கருவூராரை வழிபடுவோர்—அவரது அழியாத் திருவருள் மணக்கும் கவிதைகளைப் போற்றுவோர் என்றும் கருவிலே ஊரார் என்று அவர்கள் நயம்பெறக் கூறியது மிக ரஸமாயிருந்தது. அவர்களது அன்றைய பேச்சு மாணவர்களுக்குச் சமய உணர்ச்சியை ஏற்படுத்தியதோடு, சுவையுடையதாகவும் இருந்தது.

பாட்டால் மூவாயிரம் கருத்தால் மூன்று கோடி:

அடுத்துத் திருமூலர் திருமுறைபற்றி ஆதீனத் தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர், திரு. **முத்து, சு. மாணிக்க வாசக முதலியாரவர்கள்** பேசினர்கள். திருமூலர்பிரானது அரிய சாஸ்திரக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களை விளக்கிக் கூறினர்கள்.

'உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை'
'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'

என்பனபோன்ற பல பாடல்களுக்கு விளக்கம்கூறித் திருமந்திரம் 'பாட்டால் மூவாயிரமாயிருந்தாலும் கருத்தால் மூன்று கோடி அளவினது' என்று கூறி முடித்துக் கொண்டார்கள்.

பக்திப் பாசுரங்கள்:

தஞ்சை சிரோமணி **ஸ்ரீ ரங்கநாதாசாரியார் அவர்கள்** ('பாரத தேவி' நிருபர்) பக்திப் பாசுரங்களைப்பற்றித் தெளிவாகப் பேசினர், 'பக்தி தென்னாட்டுக்கே உரியது; பக்தி கலந்த பாசுரங்களும் நம்மவற்றைப்போல் வேறு எம்மொழியிலும் கிடையாது'—என்று கூறி ஆதீனத்து அரும்பணிகளைப் பாராட்டினர்.

பதினொராம் திருமுறை:

பதினொராம் திருமுறை பலர் பாடிய ஒரு பிரபந்தச் சோலை. அந்தச் சோலையில் ஒருவர் இருவர் உலாவி மணம் நுகர்ந்தால்மட்டும் போதாது. அதற்காக எங்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அறுவர் பதினொராந்திருமுறையைப் பற்றிப் பேசவேண்டும் என்று அருளாணை இட்டிருந்தார்கள், அதன்படி, ஆதீனத்துக் குருஞானசம்பந்தர் நடுத்தரப்பள்ளி ஆசிரியை B. **முத்துலட்சுமி அம்மையார்** 'காரைக்காலம்மையார்' பற்றியும், திருக்கருகாவூர் சமயமெய்த் தொண்டர், திரு. **மருணீக்கியார்** 'திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை'பற்றியும், ஆதீனத் தமிழ்க்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. சா. குருசாமி அவர்கள், 'நக்கீரர் நற்றமிழ்'பற்றியும், ஆதீனத் தேவாரப் பாடசாலைத் தலைமையாசிரியர், திரு. R. **வேலாயுத ஓதுவார்** அவர்கள் 'நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி'பற்றி யும், ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான், **வை. திருஞானசம்பந்தம்** அவர்கள் 'சேரன் செந்தமிழ்'பற்றியும், வித்வான், **சொ. சிங்காரவேலன்** அவர்கள் 'கபிலர் நூல்கள்' பற்றியும், ஆராய்ச்சி, தெளிவு, எளிமை, ஆழம், உணர்ச்சி நிரம்பிய சொற்பெருக்காற்றினர்கள்.

பெரியபுராணம்:

பெரியபுராணம் பெரியவர் புராணம், அதைப்பற்றிப் பேசுவோரும் பெரியராகவே இருத்தல் வேண்டுமல்லா? அம் முறையில் பெரியபுராணத்தைப் பற்றித் திருவாரூர் இராஜன் கட்டளை விசாரணை **ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

அவர்கள் பேசினர்கள். அவர்களது பேச்சு தெள்ளத் தெளிந்த தமிழ் நடையில் உவட்டாமல் இனித்தது.

முடிவுரையில் தலைவர்:

அரசரும், புலவரும், அடியாருமாக விளங்கியவர் கண்டராதித்த சோழரென்றும், ஆண்டவனை அடியார்கள் கனியெனக் கண்டார்களென்றும்,

'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி'
'சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனி'
'கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே'

என்பவையெல்லாம் அதற்குச் சான்றுகளாமென்றும்,

'வேறுவரு சமயமெல்லாம் நின்திரு விளையாட்டே'

என்ற தாயுமானவர் வாக்கு உணரத்தக்கதென்றும் கூறி முடித்தார்கள். பின் கடவுள் வாழ்த்துடன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

இரவு திருமுறை பவனி:

யானைமேல் திருமுறை அலங்கரிக்கப்பெற்று, பவனிவரத் தொடங்கியது. அநேக தேவாரமணிகளும், இசைமணிகளும் தேவார கோஷ்டியில் ஈடுபட்டு, திருவையாற்று வீதியெல்லாம் ஓரே நாதவெள்ளமாக்கினர்கள். எல்லோரும் வெள்ளத்தில் அழுந்தி மெய்ம்மறந்தார்கள். திருமுறை செய்கின்ற சித்து இதுதான்: பாடுவோருடைய உள்ளமும் உருகும்; கேட்போருடைய மனமும் நெகிழும். இப்படியாகத் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறை மண்டபம் அடையும்போது மணி 12-க்கு மேலாகிவிட்டது.

அர்ச்சனைகள்:

இரவு பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை, ஷண்முகார்ச்சனை, ஷோடசகலார்ச்சனை, அஷ்டமூர்த்தி அர்ச்சனை ஆகியவைகள் நடைபெற்றன. ஆட்கொண்டார், தக்ஷிண கைலாச - உத்தரகைலாசங்களிலுள்ள மூர்த்திகளுக்கும் மிகச்

சிறப்பாகத் தனித்தனியே ஸஹஸ்ரநாமார்ச்சனைகளும் நடந்தன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளி, தரிசனம்செய்து மகிழ்ந்தார்கள். அருச்சனைகளில் ஆதீன வேதசிவாகம பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். 'அர்ச்சனைகள்' என்ற அர்ச்சனை விளக்கத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

சாரணர்தொண்டு:

மாநாடு நடைபெறுவது குறித்தும், ஸ்ரீ-லஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளுகிறார்கள் என்பது குறித்தும் தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி சாரணக்குழுவினர்கள் முதலிலே திருவையாற்றுக்கு வந்து விட்டார்கள். அவர்கள் ஆற்றிய கடமைகளும் அனைவரும் வியப்புறும் நிலையிலிருந்தது. அவர்கள் அனைவரும் மகாநாட்டிற்குப் பிறகு திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் உள்ளிட்ட சப்தஸ்தானத் தலங்களைக் கண்டு வணங்கி, தஞ்சை சரஸ்வதிமால் நூல்நிலையம், பிரகதீஸ்வரர் கோயில் உட்பட்ட பார்க்கவேண்டிய பல அரிய இடங்களையும் பார்வையிட்டுத் தருமைக்குத் திரும்பினர்கள்.

ஐயாறு குளிர்ந்தது:

அன்னை காவிரியின் அணைப்பிலும், அறம் வளர்த்த நாயகியின் பிணைப்பிலும் களிகூர்ந்திருந்த ஐயாறு என்ற குழவி, தருமையாதீனத்துத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு என்ற சங்கின் மூலமாக, மெய்யன்பர்களாகிய தாய்மார்கள் கொடுத்த அறிவுரைகளாகிய அமுது உண்டு அகங்குளிர்ந்தது. அதன் ஆனந்தக் குரல் மெய்யன்பர்களுக்கு - சிறப்பாக எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அந்தக்குரல் இதுதான்:

'அந்திப் பிறையணிந்து ஆடும்
ஐயாறன் அடித்தலமே'

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஸ்ரீ மார்கழி-மீ 1-உ முதல் 29-உ முடிய)
(16—12—53 முதல் 13—1—54 முடிய)

1. **மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி 4 பாதமும், பரணி முதல்பாதமும் சுப சந்தோஷங்களைத் தரும். பரணி 2, 3, 4 பாதங்கள் கீர்த்தியையும் விசேஷ செலவின்பேரில் அசாத்திய சாதனங்களையும் தரும். அடிக்கடி மாத்திரம் மனக்கிலேசம் சரீர ஆயாசம் உண்டாகி மறையும். கார்த்திகை முதல்பாதம் வியாதியைத் தரும். ஔஷத சேவையால் நலன்கிட்டாது. தெய்வீக தோஷம் துர்க்கிரஹத்தால் காட்டும். புதனும் வியாழனும் நன்மைதரும்.

2. **விருஷபம்:** கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை மிருகசீரிஷம் முன்பாதி இரண்டும் துன்பத்தைத் தரும், நினைப்பதெல்லாம் மாறுக நடக்கும், பந்துமித்திராள் பெரியோர் நல்லோர் எல்லோரும் சத்துருவாவார்கள். தேவசாபம் கிட்டும். சதா வீண் செலவுகளும் நஷ்டங்களும் உண்டாகும், புத்திக்கு அடிக்கடி குழப்பமும் ஸ்திரமில்லாமலும் சலனமும் ஏற்படும். ரோஹிணிக்கு வியாதியால் துன்பம்காட்டும். ஆனல் தெய்வபலமிருந்து காக்கும், வெள்ளியும் புதனும் சுபம் தரும்.

3. **மிதுனம்:** மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் பின்பாதியும் திருவாதிரை பலனும் மிகுந்த தொல்லையைக் கொடுக்கும், அதிகச்செலவுகளும் சரீரபீடையும் ஏற்படும். புனர்பூசம் முக்காலும் சென்ற மாதம்போலவே நடப்பதோடு அதிக நாஸ்திகமும் எதிர்காலத்தின் அசுபத்தையும் காட்டும், சத்புத்தியே இராது. சதா பிறரைத் தூஷிப்பதும் அகங்கார மமஹாரங்களும் அதிகமாகும், தெய்வபலமே இராது

ஆனல் தனதான்யங்களுக்குக் குறைவைக்காட்டாது, சனிக் கிழமை சுபமாக நடக்கும்.

4. **கடகம்:** புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

ஆயில்யத்துக்கு மிசிரபலனும், அடிக்கடி இடம்மாறலும், நஷ்டதன பிராப்தியும், தொழில்மூலம் லாபமும், தெய்வபலமும் பிரகாசிக்கும், புனர்பூசம் கால் வியாதியால் அதிக பயம் தரும். பூசத்துக்கு வீண்செலவுகளும் வேலையாள் குறையும், பெரியோர் வருத்தமும், அவமானச் சொல்கேள்வியும், மிகுந்த நாஸ்திகமும் கொடுக்கும், சனி ஞாயிறு அசுபம் காட்டும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

மகத்துக்கு எல்லாம் விஜயமாகும், எங்கும் சிறப்பும் கீர்த்தியும் வித்யாவிருத்தியும் ஏற்படும், வாக்கில் சதா விஷமச் சொல்லைத் தவிர நல்லது வராது. தொழில் ஓங்கும். பெற்றோர் கள் சுகமடைவார்கள். குடும்பம் ஓங்கும். மற்ற இருநக்ஷத்திர பலனும் கஷ்ட நஷ்டத்தையே தரும், குடும்பத்தொல்லை அதிக மாகும். அடிக்கடி இடம் மாறல் ஏற்படும், காரியம் நஷ்ட மடையும். புதனும் வியாழனும் நலமிராது.

6. **கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் மூக்காலும் சித்திரை முன்னரையும் சுபம்தரும், வெகுநாளய விரோதி ஒழிவான், விவஹாரம் ஜயிக்கும். தொழில் ஓங்கும், தெய்வபலம் கிட்டும். பந்துமித்திராள் சேர்க்கையும் சுப சந்தோஷ வாழ்த்துப் பத்திரங்களும் கிடைக்கும். ஹஸ்த நக்ஷத் திரம் 1, 2, 3 பாதங்கள் பிறர் உதவியால் மேல்பதவி கிட்டச் செய்யும், தனதான்ய விருத்தியும் சந்தோஷமும் உண்டாகும். ஆனல் குடும்பத் தொல்லையாலும் வியாதியாலும் சதா துக்க மூண்டாகும். ஹஸ்தம் 4-ம் பாதத்துக்கு வெகுகாலமாக நடவாத காரியங்கள் சாதனையாகும். இல்லற சுகபோகங்கள் விருத்தி யாகும் அடிக்கடி சஞ்சாரபலன் காட்டும். தெய்வபலம் ஓங்கும், ஆனலும் சரீரத்தில் உஷ்ணரோகங்களும், சரீர இளைப்பும், அன்ன துவேஷமும் அபவாதபயமும் ஏற்படும், கடவுள் கிருபை இருந்து காக்கும், வெள்ளியும் சனியும் சுபவாரமாகும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை பின்னரையும் சுவாதி 1, 2 பாதங்களும் ஈதி பாதைகளால் விவசாய நஷ்டமும் மனக்கவலையும் காட்டும். தெய்வபலமிருந்து துக்க நிவர்த்தியாகும். சுவாதி 3, 4-ம் விசாகம் முதல் பாதமும் விசேஷ சவுக்கியத்தை என்றும் பாராதவாறு அனுபவிக்கும். சம்பூரண தெய்வபலம் கிடைக்கும். சத்துருக்கள் நாசமடைவார்கள், ஆஸ்திகம் ஓங்கும், விசாகம் 2, 3 பாதம் அதிகமான கஷ்டத்தையும் ஆபத்தையும் தரும். தெய்வபலமே இராது. சனி செவ்வாய் அசுபமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் 4-ம் பாதமும் அனுஷமும் அசுபத்தையே தரும். அமங்கள காரியமும், திட்டுக் காத்தலும், தூரதேசத்திலிருந்து அப்பிரிய வார்த்தை கேள்வியும், ஆத்ம சமானர்களுக்கு ஆபத்தும், வித்யாபங்கமும், அபஜயமும் ஏற்படும். கேட்டை பூரா சுபமாகவே நடக்கும், தெய்வபக்தியும், மேலோர் பெரியோர் ஆசியும், கீர்த்தி பத்திரமும், விஜயமும், செல்வாக்கும் ஏற்படும். புதனும் வியாழனும் சுபமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

உத்திராடம் முதல்பாதம் தவிர மற்ற மூலம் பூராடம் இரண்டும் நலன்தராது. இருந்தாலும் பூர்வ புண்ணியமிருந்து காத்துக்கொண்டு வரும். பொதுவாய் தனுர்ராசிபலன் மிசிரமாயும் அதிகச் செலவோடும் குடும்பத் தொல்லையோடும் ஓடும். புதன் வியாழன் சுபவாரவாகும்.

10. **மகரம்:** உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

உத்திராடம் முக்காலும் திருவோணம் பூராவும் சுபத்தையே தரும். நல்லொழுக்கம், கீர்த்தி, ஸ்திர ஜீவனம், நல்லோர் பெரியோர் பழக்கம், அசாத்தியமெல்லாம் சுலபசாதனம், தொழில்விருத்தி, இல்லற சுகம் முதலிவைகள் சித்திக்கும். அவிட்டம் முன்னரைக்குச் சிரமத்தோடு காலம் ஓடிக்கொண்டிருக்கும். இடம் மாறும். நூதன தொழில் பழக்கம் ஏற்படும், விவஹாரம் ஜயிக்கும். உபகாரம்கிட்டும், மனம் சாந்தியடையும்.

புதனும் வெள்ளியும் சுபத்தையும் மங்கள விருத்தி காரியங்களையும் உண்டாக்கும்.

11. **கும்பம்:** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் பின்னரைக்கும் பூரட்டாதி முக்காலுக்கும் பிரமாதமான சந்தோஷம் கிடைக்கும். இல்லறத்தில் எந்தவிதமான சுகபோகங்கள் உண்டோ அத்தனையும் அனுபவிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். பெரிய தொழிற்சாலையில் முதன்மை ஸ்தானம் வகித்தலும், பெரியோர்கள் வரத்தும், விசேஷ ஆடை ஆபரணச் சேர்க்கையும், புத்திராதிகளின் சுகமும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வாங்குதலும், கிரய விக்ரய கௌசலமும், காலி கன்று நூதன வாஹனாதிகள் விருத்தியும், கட்டட வேலைகளும், சதா சந்தோஷமும் உண்டாகும். சதயம் பூரா கவலையுடன் காலம் ஓடும். அசுபமிராது. புதன் வியாழன் சனி நலன்தரும்.

12. **மீனம்:** பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

ரேவதி முதல்பாதம் தவிர மற்ற பாதங்கள் பூரா பூர்ண சுபத்தைத் தரும். பூரட்டாதி 4-ம் பாதம் மிசிரமாய் நடக்கும். உத்திரட்டாதிக்கு அதிக உழைப்பின்பேரில் சந்தோஷம் தரும். ரேவதி 2, 3, 4 பாதங்கள் என்றும் கண்டிராதபடியும் ஆச்சரிய கரமுமான தெய்வபலமும் முன்தோன்றி இல்லற சுகத்துக்கு வேண்டிய அளவு தனதான்ய லாபங்களையும் சாஸ்வதமான ஸ்திர ஜீவனங்களையும் எல்லோருக்கும் நல்ல மதிப்பு உண்டாகும்படியான சந்தோஷத்தையும் தரும். புதனும் சனியும் சுபவாரமாகும்.

குறிப்பு:- ஷை மாதம் அமைந்த கிரஹ கோசாரங்கள் உலக க்ஷேமத்தையே சூசிபிக்கும்படியாக அமைந்திருக்கிறது. தக்ஷிணதேசம் அங்காரகபூமி புண்ணியபூமி என்பதற்குச் சாக்ஷியாகவும் சுபகோசாரங்கள் மூலமாகவும் சில பாபிகளால் உலக நாசத்துக்கு விதைகோலும் நாஸ்திகர்களை அடக்கவந்த நாகப்பட்டணம் பெரும் புயல் பிசுபிசுத்துப் போய் அபயம்தந்தது குறிப்பிடத்தக்கது. கடவுள் துணைபுரிவாராக. ஆஸ்திகமும் ஸஜ்ஜனங்களும் ஓங்குக.

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. 61

62. * *

இன்னிலேதா னிலேயாயின் என்பது லயநிட்டை யாமாறு கூறுகின்றது. ஈண்டு நூல் விவேகத்து வாய்க்குந் தத்துவ லய சமாதி முற்கூறியவாறே யுற்பத்தியான வடைவே லயிக்கவும் பண்ணி சுவரூப நிட்டனுகிறது. அது குறுந் திரட்டில்,

எற்பட வீளங்கும் விவேகவன் னியினு
லெண்ணுமைம் பூதத்தை யழித்து
நிற்பன நடப்பன யாவுமற் றவற்றை
நேர்மையா மவற்றினே ராக்கி
யற்பமாம் பூத மாயையி லழித்து
மாயையாத் மாவிலே யழித்துத்
தற்பரப் பொருளாந் தன்னிலே முன்னைத்
தானிறைந் திருப்பது சமாதி,

என்றுற்போல வருவனவுங்கொள்க. இவ்வாறு முப்பத்தாறு தத்துவ பகுதத்தும் கண்டுகொள்க. பிறவும் பலபட விரித் துணர்ந்து தத்துவ லய சமாதியாமாறு காண்க. இவ்வாறு கருதுவது வெளியிற் பரம்பினெல்லாம் பிரமமயமாய்ப் பாக்க வுஞ் சமாதி கூடும். அது குறுந்திரட்டில்,

அச்சமா முடற்பி ராணனம் புலன்க
ளக்தநாற் கரணமஞ் ஞானத்
துச்சமா முடல்கொண் டொழிந்திடுஞ் சிவன்
றூலபூ தங்கள்சூக் கங்க
ளெச்சரா சரமு மீன்றமா மாயை
யீசனென் பேதமொன் றின்றிச்
சச்சிதா னந்த மாகிய பரனே
தானெனச் சமைவது சமாதி.

எனவரும். இது மாயாவாதத்தில் வெகு பிரசித்தம். ஆண்டு

விரிவினுணர்ந்து கொள்க. இனி லக்ஷியத்தியானத்திலை நிட்டை கூடுவது யோகமார்க்கம். அது திருமந்திரத்தில்,

நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லைச் சிவனவ னுமே. 604

எனவும்,

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
அண்ணுக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.

எனவும் வரும். இனி **யகத்தினிற் புருவ நடு முதலாய் விதித்தவயி** னென்பது ஆதார யோக பேதம். அதுவும் திருமந்திரத்தில்.

சந்திர பூமிக் குடன்புரு வத்திடைக்
கந்த மலரி லிரண்டிதழ்க் கன்னியாய்
பந்த மிலாத பளிங்கி னொளியதாய்ப்
பந்த மிலாதது பாங்குறத் தான்பற்றே.

என வருமாற்றுனுணர்க. இவ்வாறு யோகமார்க்க மின்றியு மணியாகித் தியானத்தினிட்டை கூடுவது முன்பாதஞ்சல யோகத்திற் கூறியவாறு கொள்க. 62

63. * * *

அன்றி யொன்றெனும் என்பது .... கண்டவொண் பொருளைப்பற்றியுங் கருத்தடங்குமாறு செய்ய நிட்டை கூடு மென்கின்றது. இது ... பிராணயாமாதி யன்றியு நிகழ்வ தாம். அது ஞானவாசிட்டத்தில்,

அறிபொருளே விட்டகன்று லழியுஞ்சித்த
மந்தநிலை வியாபார மனைத்து மில்லாச்
செறிநனவிற் சுழுத்தியா மிதனைநாளுந்
தீராத பரிசயமே செய்யச் செய்யப்
பிறிவின்முது துரியமா மென்பர் மேலோர்
பிழையிலா விதனிலே நிலைமைபெற்றுக்
குறியறுமா நந்தமே காந்த சீலக்
கொள்கையா லாநந்தங் கூடுமன்றே.

எனவும்,

நனவிற் சுழுத்தி நிலைமேவி நன்றுயெல்லா முள்ளகற்றி
தனதிச்சை யில்வந் ததுபுறத்தே சமைப்பாய்சித்தமுண்டாகைக்
கனதுக்கமதாஞ் சித்தமறிற் கனத்தசுகமாஞ் சித்தத்தை
யுனதுட்படுத்தி யுணர்வின்மை யாலே யொழிப்பாயுணர்
வுருவாய்.

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. வாசனை கழிவதற்கு முன்னுதாகரித்ததேயாம். 63

64. * * *

இனியாதலினுல் என்பது சீவன்முத்தி இயல்பிதுவென முடித்திவ்வாறு சுத்த சைவம்போல அத்வைதமாய் கூறுவது சித்தாந்தத்தும், ஸர்வஞாநோத்தரம், கந்தகாலோத்தரம், தேவீ காலோத்தரம் முதலியவைகளும் சுப்பிரபேதமும் அஜிதம் மகுடம் காரணம் வீராகமாதிகளு மூளவெனக் கூறுமுகத் தாற் பரமுத்தி சுவரூபமுமிந்தச் சுத்தசைவப் பிரவர்த்தக ரான ஆசார்யரிவர்கள் என்பதும் கூறுகின்றது. ஈண்டுக்கூறு முத்திநிலைக்கு அறிவானந்த சித்தியில்,

பொங்கு கனலிற் புலிங்கமு மப்பினிற் புற்புதமும்
வெங்கதிரிந்து விரிந்தேழு மேகமு மேவுதல்போற்
றங்குஞ் சிவத்தினிற் சித்சத்தி மாயை சராசரமாய்த்
துங்கவைம் பூதங்க டத்துவ மற்றதுந் தோன்றிடுமே. 84

எனவும் குறுந்திரட்டில்,

எழுதரு மூழுது மவனியி லழிய வெழுபுவி புனலிடையழிய
மூழுதுறுபுன லு மனலிடையழிய மூரணெரி வளியினிலழிய
விழிவறு வலிய துடைவளி வளியினி லழிய வெளி
தெரிவருவிருளில்
அழிதர விருளுமறிவினி லழிய வழிவறு நிலையறி வதுவாம்.

எனவும் பிறவும் முற்காட்டியனபோல வருமாற்றானுணர்க. அன்றி,

வானது கடந்தொறும் நின்ற வண்ணமே
யோனி (கள் யாவையும்)ள் கலந்த வா
றானதி லானது மிலனழிந்து தான்
போனது மிலனவை பொன்றும் போதுமே.

என மாயாவாதி கூறுமாறு கூறுதலானும் உணர்க. சுத்த சைவக் குரவராயினர் பாம ... ரவர்!

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவ
மூவமா மகேச ருருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றும் பெற்ற
நவவா கமமெங்க ணந்திபெற் றானே. 62

என வருமிவர்கள். பின்குரவராயினர்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திக ணல்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரம
ரென்றிவ ரென்னே டெண்மரு மாமே. 67

இவருள் நந்திகள் நால்வர் சனகாதி நால்வர். இவர்கள் .... றுள்ளார்,

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்க
னிந்திரன் சோமன் பிரம னுருத்திரன்
கந்தருக் காலங்கி கஞ்ச மலியனே
டிந்த வெழுவரு மென்வழி யாமே. 69

குமாரபகவான்பால் வேதாந்த மார்க்கத்தின் வந்த வாண்ட தேவர் சந்தானமொன்று. சித்தாந்த மார்க்கத்தில் சிவஞான போத வழிவந்த மெய்கண்டதேவர் சந்தானம் ஒன்று. மலைய மான்தேவர் சந்தானம் ஒன்று. இனிச் சனந்த முனிகள் பால் வந்த சந்தானமொன்று. இனிச் சனகமுனி வேதாந்த மார்க்கத்து மெய்ஞானதேவர் சந்தானமொன்று. சித்தாந்த சிவானந்ததேவர் சந்தானமொன்று. பரமானந்த நாயனர் சந்தான மொன்று. சனந்தனர்பால் வேதாந்தத்தின் வந்த சுவரூபானந்த யோகிகள் சந்தானம் ஒன்று. ஆக நந்திகேசு வரரால் வந்த சந்தானமெட்டு. இனி விஞ்ஞான தேவரான் போகநாதரென்னும் உருத்திரதேவரால் வந்த திருமாளிகைத் தேவர் சந்தானமொன்று. வெளிகண்டதேவர் சந்தான மொன்று. வாமதேவர் சந்தானமொன்று. உத்தமநாதர் சந்தானமொன்று. கருவூர்த்தேவர் இடைக்காட்டுத்தேவர் திருவள்ளுவதேவர் சிவவாக்கியத்தேவர் சந்தானம் நான்கு எனப் பதினறுவகை. பழையவான ஞான சந்தானங்களாற் பரம குரவர் வழிவந்த குரவர் பதினறுவரென்க. இவற்றின் பின்புளவானவைகள் திருநெறிச்சந்தானம், திருப்பெருந் துறைச் சந்தானம், திருமழபாடிச் சந்தானம், நிறைந்த தேவ நாயனர் சந்தானம், சிங்கநாததேவர் சந்தானமெனவும் பிறவும் வரும். பலவற்றினும் பலர் ஞான குரவர்கள் உளர் என்க. பிறவும் விரிப்பிற் பெருகும். **சந்தான வரலாற்றுட்** கண்டு கொள்க. 64

65. * * *

முகந்திகழ்மூர்த்தி என்பது ஞானதேசிகர் சின்னங்க ளாமாறு கூறுகின்றது. அது ஞானசித்தியில்,

ज्ञानमुद्राविधिःप्रोक्तस्तत्र सन्मार्गदर्शनम् ।
अनुभूतिप्रकर्तव्यं शिवानन्दोद्भवं सदा ॥
द्वादशं मार्गसम्बन्धं शृणु देवि वरानने ।
मुखं पीठं मठं देवं वर्गदर्शनषष्ठमम् ॥

आसनं गिरि गुहाचारो वर्णषष्ठकम् ।
एतद् द्वादशसन्मार्गप्रधानाचारमुत्तमम् ॥
मूर्तिरूपं मुखं ज्ञेयं दशाधारं तु पीठकम् ।
पराशक्तिर्मठं प्रोक्तं दैवं तत्र परात्परम् ॥
ज्ञानिनां वर्गमाश्रित्य शुद्धशैवस्य दर्शनम् ।
आसनं ज्ञानशक्त्यर्थं गिरिपञ्चाक्षरोऽलयम् ॥
चित्तं बिन्दुस्वरूपं च उपशान्तिर्गुहा च वै ।
सर्वाचारविनिर्मुक्तं ज्ञानाचारप्रवर्तकम् ॥
वर्णमध्यात्मवर्णं तु एतद् द्वादशमुच्यते ।

எனவும் திருமந்திரத்தில்,

சாந்தங் குகை முத்தி ... ...
... வாகமெலெய்திடுஞ் சத்தியாதி
கூர்ந்திடு முத்திரை கொ ... திரம
வாய்ந்துப தேசமாமார்க்கஞ் சித்தாந்தமே.

எனவும் வரும். 65

தக்கணமத முற்றும்

இனி யிதன்மறுப்புக் கூறத்தொடங்குதுமெனக் கூறும். **தக்கணமத** மென்பது. இவ்வாறு தக்கண சித்தாந்தத்துக் கூறும் வேதாந்தநிலை கூறிமுடிந்தது.

தக்கணமத பேதமான சுத்த சைவமத நிராகரணம்

1. * * *

இனி யிதன் மறுதலைதக்கணசித்தாந்த மென்பது. இது சித்தாந்த சைவமான சைவசித்தாந்தத்திற்கு அகப்புற மாகலிற் பூருவபக்கமான தக்கணமதம் வாமபேதமென்று தோன்ற நவாகமமு மிவைகளென்கின்றது. இவ்வாறு சித்தாந்தத்திற்கு அகப்புறமென்பது முன் உதாகரித்தாம். 1

2. * * *

நவமான தந்திரமும் என்பது இந்த வாமபேதமான தக்கணமதம் அகப்புறச் சமயம் என்பதற்கேதுவும் சித்தாந்த வேதாந்த சமரசம் பண்ணுமாற்றுற் சித்தாந்தத்திற் கதிசய மும் நீயே சொன்னாய் என்பதுங் கூறுகின்றது. ... லென்பது சித்தாந்தத்திற்குச் சிறப்புக் கூறியது. ஈண்டுக் கூறியது சுத்தசைவமென்றது வாமாதி நவதந்திர பேத நவசித்தாந்தங் களும் சுத்தமென்பது குறித்ததென்புழி நவதந்திரமூலம் வாமம் என்பதும் காமிகாதி சித்தாந்தம் என்பதும் சிந்தியாகமத்தில்,

वामदक्षिणसिद्धान्तं त्रिधातः शुद्धशैवकम् ।
मूलावतारतन्त्राणि शास्त्रं यद्वामशैवकम् ॥
स्वच्छान्दादीनि शास्त्राणि दक्षिणं शैवमुच्यते ।
कामिकादीनि तन्त्राणि सिद्धान्तं शैवमुच्यते ॥

எனச் சைவநிகண்டில் வருமாறு காட்டியவாற்றுன் உணர்க.

3. * * *

இனிச் சித்தாந்தம் சகமார்க்கமன்று. சன்மார்க்கமாய்ச் சர்வார்த்தப் பிரதாயகமா யிருத்தலின் முக்கியமென்பது. காமிகத்தில்,

कामिकादि शिवज्ञानं बुध्वा भगवतः सदा ।
इतराणि महेशस्य हृत्कण्ठाद्यङ्गकानि वै ॥
पूर्वपक्षतया तानि शम्भुनाऽमिततेजसा ।
हेयोपादेयवस्तूनां निर्णये परमार्थतः ॥
तत्सर्वमधरीकृत्य शिवसिद्धान्त ईरितः ।

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. 3

4. * * *

நாலுமுண்டாய்ச் சித்தாந்தம் என்பது அந்தச் சுத்த சைவம் பூருவபக்கமென்பதைத் திடப்படு முகத்தாற் சித்தாந்தம் மாயாவாத சாமரஸ்யம் கூடாதென்கின்றது. இதற்கு உதாரணம் முன்காட்டினவற்றுளன்றி மேலும் விளங்கும். 4

5. * * *

ஒருபுடையா னெக்கும் என்பதும் மாயாவாத சித்தாந்த சமரசீபாவங் கூடாதென்கின்றது. நீ கொண்ட சீவ பரத்தின் மேற் சிவமுமவன் கூடஸ்த ... னென்பதாம். அது சூதசங்கிதையில்,

जीवेश्वरत्वरहितः केवलः स्वप्रभः शिवः ।

என வருதலின். இனிச் சிவத்தினவாந்தரமாயடக்கமாய் வரும் சத்தியாதி நான்கிற்கும் கொண்ட நீலோற்பலவாக்கியம் மாயாவாதத்தில்லை சம்ஞானம் அநந்தம் ஆனந்தம் மென்னு மவாந்தர வாக்கியமாய் கேட்டபதுபோல மற்றினத்துங் கேட்கப்படுதலின். பிறவுமன்ன. 5

6. * * *

இத்தகைய என்பது அவ்வாறு சமரசம் பண்ணினதாற் ... வற்புறுத்தியது. மற்றினத்தும் விரித்துக்கொள்க. 6

7. * * *

இப்படியால் என்பது தத்துவ தாத்விகத் தோற்றமு நீயறியாது கூறினை யென்கின்றது. அது பொருவரிய மூர்த்திகள்பாற் ... ... தோன்று மெனவும் பிறவும் முன்னேதியவற்றுணர்க.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

II பொருட்பால். III காமத்துப்பால்.

உரைப் பகுதி, மேற்கோள் பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழி வெண்பாக்கள் ஆகிய ஐந்துபிரிவுகளில் உரைவளம் தொகுக்கப் பெற்றுள்ளது. ஆசிரியர் குறிப்பும் தரப்பட்டுள்ளது.

காமத்துப்பாலில் தொகுப்பாசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் 51 தலைப்புகளில் ஓர் அரியபெரிய நூல் ஆராய்ச்சியும் எழுதப்பெற்றுள்ளது,

M. O. மூலம் பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

பொருட்பால் விலை விபரம்

கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோபைண்டு ... ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ... ரூ. 2—0—0

காமத்துப்பால் விலை விபரம்

கிரௌன் 1×4 சைஸ் 536 பக்கங்கள்.

காலிகோபைண்டு ... ரூ. 6—0—0
தபாற்செலவு வகையரு ... ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:— மானேஜர்,

தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தில் திருவெம்பாவை திருப்பள்ளி மாநாடு

27—12—53 முதல் 5—1—54 முடிய.

சொற்பொழிவு, இசையரங்கு, கதாகாலக்ஷேபம் முதலியவை நடைபெறும். பேரறிஞர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

திருவெம்பாவைச் சொற்பொழிவு

மார்கழி மாதம் 1-ந் தேதி முதல் தருமபுர ஆதீனத்தால் நிறுவப்பெற்ற தெய்வத்தமிழ்ப் பிரசாரக் குழுவினரால், தஞ்சை ஜில்லா கிராமங்களில் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெறும்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங் களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 1—12—53 அன்று திருக்கருக்குடி சற்குணநாதர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—12—1953.